தென்மொழி

மொழியுணர்வு தோன்றாமல் இனவுணர்வு முகிழ்ப்பதில்லை !

மொழியுணர்வு தோன்றாமல் இனவுணர்வு
முகிழ்ப்பதில்லை ; வலுப்பதில்லை; இயங்குவதும்
இல்லை என்க !
முன்னோர்தம் வரலாற்றைப் பெருமைகளை
உணராதார் முனைந்தெழுந்து நிற்பதுவும்
முடியா தென்க !
பழியுணர்வு வடவர்களோ தமிழினத்தை
வீழ்த்துதற்குப் படைசேர்த்து நம்வலிவைப்
பாழ்செய் கின்றார் !
பதைப்பில்லை; உணர்வில்லை; தமிழர்களிடம் !
பங்காளிச் சண்டைகளும் வலுப்பெற்றுப்
பகைகொள் கின்றார் !
விழியுணர்வும் செவியுணர்வும் மனவுணர்வும்
இல்லாத ஏழையர்கள் உரிமைபெற
விழிப்ப தென்றோ ?
விழித்தவரோ அடிவருடிப் பிழைக்கின்றார் !
வேற்றுவர்பால் இனங்காட்டிக் கொடுக்கின்ற
வீண ரானார் !
இழிவுணர்வும் கதையுணர்வும் பொழுதுபோக்
கிடும்உணர்வும் எழுந்துநின்றே இனவுணர்வைச்
சிதைக்கும் இங்கே !
ஏமாறும் தமிழரிடை இணக்கவுணர்
வெழுந்துசெயல் தோன்றியினம் போராடிச்
செழிப்ப தெங்கே ?

சுவடி : 24
ஓலை : 4

ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

விலை
உருபா:2-00

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

O: 1284: பேரன்பின் ஐயா அவர்களுக்கு வணக்கம்.

இட்ட சாவம் முட்டும்! முட்டும்!
இட்ட சாவம் முட்டும்! முட்டும்!
இட்டார் செந்நாப் புலவர் ஆகலின்!
இட்டார் உண்மைப் பட்டார் ஆகலின்!

ஏவு சாவம் மேவும்! மேவும்!
ஏவு சாவம் மேவும்! மேவும்!
ஏவியார் ஆவி நொந்தார் ஆகலின்!
ஏவியார் குற்றம் இல்லார் ஆகலின்!

கூறு சாவம் ஏறும்! ஏறும்!
கூறு சாவம் ஏறும்! ஏறும்!
கூறியார் பெண்டிர், பிள்ளை ஆகலின்!
கூறியார் கொடுங்கோல் பட்டார் ஆகலின்!

போட்ட சாவம் மாட்டும்! மாட்டும்!
போட்ட சாவம் மாட்டும்! மாட்டும்!
போட்டார் ஈழப் புலிகள் ஆகலின்!
போட்டார் வீரம் மிக்கார் ஆகலின்!

— தங்களன்புள்ள.
த. அன்பழகன். மஞ்சள் நீர்க்காயல்,

O: 1285: அன்பு ஐயா அவர்களுக்கு, வணக்கம். இக்கால் 'தென்மொழி: தமிழ்நிலம்' இதழ்கள் சிறப்பான கருத்துகளைத் தாங்கி வருவதைக் குறித்து மகிழ்கின்றோம்! தங்களிடம் இழப்பதற்கு ஒன்று மில்லையால், அஞ்சுவதற்கு மில்லை.

இரண்டு காரணங்களுக்காக மடலை எழுதுகிறேன்! தமிழ்நிலத்தில் வெளியான செ. அமிழ்தன் என்பவரின் ஆர்வ மடல் சார்பானது.

அன்னாரின் வினக்களுக்கு விடை மிகவும் எளிமையானது! தமிழ் மண்ணில் எவராவது உண்மையான தொண்டு செய்ய விரும்பினால் — அவர்கள் இந் நாட்டின் ஊர்களுக்குச் •(சேரிகளையும் சேர்த்துதான்) — அஃதாவது நாட்டுப் புறங்களுக்குச் செல்ல வேண்டும். அவ்வழுக்குப் படிந்த அறியாமை நிறைந்த நாட்டுப் புறங்களில் (கிராமங்களில்) தாம் விடுதலைப் பணிகளே முழ்கியுள்ளன! இத்தமிழ் நிலத்தின் சேரிகள் எனும் ஊர்கள் விடுதலை பெறாத வரையில் தமிழ் நாட்டு விடுதலை என்பது வெறும் கனவே! தமிழகத்தின் நாட்டுப் புறங்களனைத்தும் அழுக்கு, மாசுகளிலிருந்து — துப்புரவு பெறாத வரையில் — அறியாமை இருளிலிருந்து, கல்வி ஒளியைப் பெறாத வரையில் — பஞ்சம், பட்டினி, போன்ற வறுமைப் பிணிகளிலிருந்து வளம் பெறாத வரையில் — கம்பத்துக்காரன் (நிலக்கிழார்), அடகு பிடிப்பவன் (மார்வாடி கடைகாரர்கள்), அரசியலின் பேயரக்கன்கள் போன்ற கொடியவர்களின் அடிமைத்தளையிலிருந்து —

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் விடுதலை அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே. தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு. நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசுஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், தென்மொழி கதிர் மதியன், தென்மொழி இரா. பாலகங்காதரன் பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்; பாச்சுடர். புலவர். இரா. வடிவேலனார். க. மு, கல், இ; மருத்துவர்.சி. இராமச்சந்திரனார், வழக்கறிஞர். பொன்னெழிலன் செங்கோட்டைய்யா நல்லையா. (தொலைபேசி : 847829)

சுவடி 24] உ0௩௬ மேழம் (ஏப்-மே'88) [ஓலை 4

தமிழரசன் தம்பிகளுக்கு!

தமிழகத்தின் இன எழுச்சிக்கும், பார்ப்பனீய எதிர்ப்புக்கும் இந்துமதத் தாக்கத்திற்கும் வித்திட்ட தந்தை பெரியார் அவர்கள்-தாம், தனித்தமிழ் நாட்டுக் கொள்கையினையும் முன்னெடுத்தார். தொடக்கத்தில் திராவிடநாட்டுப் பிரிவினையை வலியுறுத்திய அவர், பின்னர் 'தமிழ்நாடு தமிழ

ருக்கே' என்னும் தமிழ்த் தேசிய இன விடுதலைக் கொள்கையை முன் வைத்தார். ஆனால் அக்கொள்கை. திராவிட இயக்கக் கொள்கையின் அரசியல் பிரிவினராகிய அறிஞர் அண்ணா அவர்களின் கட்சியினராலேயே, பெரியார் காலத்திலேயே, பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. எனவே பெரியார் அவர்கள் தம் இறுதிக் காலம் வரை, தன்னந்தனியராகவே இருந்து, தமிழ்நாட்டுக் கோரிக்கையை, வெறும் கொள்கையளவாகவே வலியுறுத்தி, அதன் தொடக்கப் போராட்டத்தையும் கூட நடத்தாமல், மறைந்து போனார்.

ஆனால், அவரின் இறுதிக் கால முதலே, நம் தென்மொழி தொடங்கப் பெற்ற நாளிலிருந்தே, நீர்த்துப் போன, அத்தனித் தமிழ் நாட்டுக் கொள்கையினை மறைந்து போகாமலும், தமிழ் மக்கள் மறந்து போகாமலும் நாம் காத்து வந்ததோமன்றி, சிறிது சிறிதாக அதற்கு வலிவூட்டியும் வந்திருக்கிறோம். —என்று இங்குக் குறிப்பிட வேண்டியிருப்பதற்குப் பெருமைகொள்கிறோம், இதற்கெனப் பல படிநிலைகளையும் வேறான அணுகுமுறைகளையும் நாம் பின்பற்ற வேண்டியிருந்தது.

தமிழின மக்களுக்குப் பெரியார் காலத்திலேயே இருந்த தலையாய மன மயக்கங்கள் மூன்று. ஒன்று மொழிபற்றியது. ஆரியப் பார்ப்பனியம் எவ்வாறு இனநிலையில் தமிழர்களிடம் சாதிக்குழப்பங்களை வலிவூன்றச் செய்திருந்து, அவர்களை ஒன்றுபடாமல் செய்திருந்ததோ, அவ்வாறே மொழிநிலையிலும் ஆரிய மொழியாகிய சமசுக்கிருதக் கலப்பால், தமிழ் மொழியின் தூய்மையையும், உண்மை வடிவினையும் சிதைத்து, வலுக்குன்றச் செய்து தனித்தியங்கஇயலாமல் அதனைத் தாழ்த்தி வைத்திருந்தது. இதனால் தமிழர், உண்மையான தாய்மொழி உணர்வு கொள்ளமுடியாதவர்களாகவும், இனவுணர்வால் எழுச்சியுற்று ஒன்று பட முடியாதவர்களாகவும் இருந்தனர். அத்துடன் அவர்கள் தங்கள் தாய்மொழியின் பெயரால் தமிழினத்தவர்கள் அல்லது தமிழர் என்று கூறிக் கொள்ளவும் கூட இயலாதவர்களாக இருந்தனர். மேலும், தமிழர், ஆரியத்தை எதிர்த்துத் தனித்துப் போராட முடியாதவாறு, மதத்தாலும், சாதியாலும் சிதறிச் சிறுபான்மையினராகவும், இருந்தனர்,

எனவேதான், பெரியார் அவர்கள் குமுகாய, அரசியல் பொருளியல் நிலைகளில் மிகவும் வல்லாண்மை யுற்றிருந்த ஆரியத்தை எதிர்த்துப் போராடுவதற்காகத் தமிழர் தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள், ஆகிய தென்திராவிட மொழியினமக்களை ஒன்று கூட்டக்கருதினார், இவ்விக்கட்டான தவிர்க்கமுடியாத நிலையில் தான் திராவிடத்தின் பெயரால் இயக்கம் காணவேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது போலும். மேலும், பெரியார் அவர்களே பிறப்பால் கன்னடியர் ஆகையால் தமிழர்க்கென்றுமட்டும் தனித்து ஓர் இயக்கத்தைக் கூட்டவும் தமிழர்கள் அவர்மேல் நம்பிக்கை வைக்கவுமான ஒரு சூழல் அன்று உருவாகியிருக்கவில்லை என்பதும்

கவனிக்கவேண்டிய ஒன்றாகும். காலப்போக்கில் மொழிவழி மாறியவர்கள் பிரிக்கப்பெற்றுத் திராவிட இனங்கள் இனி ஒன்றாக முடியாத நிலை ஏற்பட்ட பின்னர் பெரியார் திராவிட நாட்டுணர்வைத் தவிர்த்துத் தனித்தமிழ் நாட்டுணர்வு கொண்டாரேனும் அவரால் முன்னர் தொடங்கப்பெற்ற திராவிட இயக்கத்தை, கைவிடவோ, அதைத் தமிழின உணர்வாக வேறுபடுத்திக் காட்-டவோ இயலாமற் போனது.எனவே திராவிடஇனமயக்கத்தையும் இரண்டாவதாக நாம் பிரித்துக் காட்டித் தவிர்க்க வேண்டுவதாயிருந்தது. இவ்விடத்தில் நாம் ஓர் உண்மையைத் தெளிவாக அறிந்து கொள்ளல் மிகவும் இன்றியமையாதது. திராவிடம் என்னும் சொல் ஆரியர் உருவாக்கிய சொல், அது முந்தித் தமிழர் வரலாற்றிலோ, பழந்தமிழ் இலக்கியங்களிலோ எங்கும் இல்லை இக்கால் தூய தமிழர் மதங்களாகிய சிவனியமும் (சைவம்) மாலியமும் (வைணவம்) எவ்வாறு ஆரியர் கலப்பால் இந்துமதம் என்றொரு புதுப்பெயரால் குறிக்கப் பெறுகின்றனவோ, அவ்வாறே, தமிழம் (தமிழ் மொழி) அவர்களால் 'திராவிடம்' என்று குறிக்கப்பெற்றது பின்னர் அது, தமிழ் தவிர்த்த-தமிழனின் கிளைத்த. மலையாளம் தெலுங்கு, கன்னடம், துளு, முதலிய மொழிகளைக் குறிப்பதற்கு ஆகிய சொல்லாகக் கால்டுவெல் போலும் மொழி நூல் ஆசிரியர்களால் பயன்படுத்தப்பெற்றது. இனி, அதனினும் பின்னர், திராவிட மொழிகள் தமிழினின்று பிரிந்த சேய்மொழிகள் என்பதைப் பெருமைக் குறைவாகக் கருதிய அத்திராவிட மொழியாசிரியர்களும், புலவர்களும் திராவிடம் எனும் சொல்லை, தமிழ் உள்ளடக்கிய அனைத்துத் திராவிட மொழிகளுக்கும் மூலமொழியாக இருந்த ஒரு பழம்பெரும் மொழியைக் குறிக்கப் பயன்படுத்திக்கொண்டனர். ஆனால், உண்மையில் திராவிடம் என்று ஒரு மொழியோ, அது தழுவிய ஓர் இனமோ என்றுமே இருந்தன, அல்ல: இந்து மதம் ஓர் இந்தியா போலும் அதுவும் ஒரு கற்பனைப் பெயரே. வரலாற்றுப் பெயரே அன்று, தமிழே ஆரிய வழக்கில் திராவிடம் ஆயிற்று: எனவே தமிழரே திராவிடர் 'என்றும் அவர்களால் குறிக்கப்பட வேண்டியவராகவும் ஆயினர் -இங்குக் கவனிக்க:

தமிழ் வழக்கு	ஆரிய வழக்கு
தமிழ்	தமிழம், திரமிளம், திராவிடம்;
தமிழர்,	திராவிடர்.
சிவனியம்,	சைவம்.
மாலியம்,	வைணவம்.

தமிழ் என்னும் மொழியைப் இன்றைய மலையாளிகளும், கன்னடியரும், தெலுங்கரும் தங்கள் மொழிகளுக்கு மூல மொழி என்று ஏற்றுக்கொள்ள விரும்பாதது போலவே, தாங்கள் திராவிட இனத்தவர் என்பதையும் ஒப்புக்கொள்ள விரும்பாததையும் கவனிக்-கவும்.

எனவே, ஆரியத்தை ஒழிக்க வேண்டும் என்னும் பெரியார் கொள்கையில், நாம் சில திருத்தங்களையும் மாறுதல்களையும்

Scanned with CamScanner

செய்து அதன் பின் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அவற்றில் முதலாவது, சமசுக்கிருதம் தவிர்த்த தூய தமிழ் வழக்கு. (தூய தமிழைப் பெரியார் தொடக்கத்தில் — மறைமலையடிகளாரின் தொடர்புப் பயனால் — ஏற்றிருந்தாலும், பின்னர் படிப் படியாய்த் தமிழ் மேல் கொண்டிருந்த கொள்கைகளைத் தவிர்த்து — இறுதியில், தமிழையே ஒரு காட்டு மிராண்டி மொழி என்று சாடவும் செய்தார். இதையும் தென்மொழியின் தொடக்கக் காலத்தில் நாம் விளக்கவும் சிக்கறுக்கவும் வேண்டியிருந்தது.) இரண்டாவது, திராவிடம் என்னும் சொல்லைத் தவிர்த்துத் தமிழர் அல்லது தமிழினம் என்னும் இனநிலை விளக்கக் குறிப்பு. இவையிரண்டையும் ஏற்கனவே பெரியாரைப் பின்பற்றி வந்த தமிழினத்தவர்கள் எதிர்த்தனர், முகஞ்சுழித்தனர்; ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். ஏனெனில், முன்னரே, திராவிடம் என்னும் பெயரால், தங்கள் இயக்கங்களில் ஒன்றி நிற்கும் தெலுங்கரையும், கன்னடியரையும் இந்நிலை வேறு பிரித்து, அகற்றி விடுமோ என்று அஞ்சினர். நல்ல வேளை இத் திராவிட இயக்கங்களில் மலையாளியர் மிகுதியாகச் சேர விரும்பவில்லை. ஏனெனில் மலையாளியர் பழஞ் சேர நாட்டினராகலின், அவர்கள் பழந்தமிழ் மரபின உணர்வினராக இருந்ததால், வேறு திரிபுத் தமிழராகிய திராவிட இனத்தவருடனும், இற்றைத் தமிழர் எனப்பெறும் கலப்பு இனத்தவருடனும் தொடர்பு கொள்ள விரும்புவதில்லை. (முன்னாள் முதல்வர் ம.கோ.இரா.வின் செய்தி வேறு வகையானது; வேறானது). ஆனால், பெரியாரின் தலையாய கொள்கை தனித் தமிழ் நாட்டுக் கொள்கையே ஆதலால், அதை நாம் கைவிட முடியாததாகப் போனது. எனவேதான் பெரியாரின் நேரடியான கொள்கை வழியினர்க்கும் நமக்கும், பெரியார் காலத்திலிருந்தே ஒரு பொருந்தாமை உணர்வும் புலத்தல் நடைமுறையும் இருந்து வந்தன; இருந்தும் வருகின்றன.

இனி, பெரியாரின் தனித்தமிழ் நாட்டுக் கொள்கையை அவரினும் வலிவாகவும் பொலிவாகவும் மெய்ம்மையாகவும் நாம் எடுத்துச் செல்ல வேண்டியிருந்ததால், மூன்றாவதாக அவரின் இன்னொரு கொள்கையினையும் நாம் கைநெகிழ்க்க வேண்டியிருந்தது. அஃது அவரின் இறைமறுப்புக் கொள்கை.

இறைமை மறுப்பு என்பது ஒரு கொள்கையாக இருக்கலாம். ஆனால் இறைமை என்பது உண்மை. உண்மையை எப்பொழுதும் கொள்கை அளவில் சுருக்கிப் பொருள் கொள்ளக் கூடாது. தமிழர்தாம் இறைமையை உலகுக்கு உணர்த்தியவர். ஆரியர் அல்லர். ஆரியர்க்கு இறைக் கொள்கை கிடையாது. பூதவியல் கொள்கையே அவர்களுடையது. இக் கொள்கை ஆரியர்கள் பரப்பியது என்பதாகத் தவறாக விளங்கிக் கொண்டுதான் பெரியார் இதை எதிர்த்ததாகக் கொள்ள இடமுண்டு. இன்னும் உலக இனங்களில் இன்றுள்ள தெய்வக் கொள்கை-

கள் அனைத்தும் தமிழரின் பழைய இயையியல் கோட்பாடே ஆகும். அவரின் மொழி எப்படிப் பழைமையோ, அவ்வாறே அவரின் இறைமையும் பழைமையே! தமிழ்மொழிதான் உலக மொழிகள் அனைத்துக்கும் எவ்வாறு மூலமும் முதலும் ஆனதோ, அவ்வாறே அதன் இறைமை உண்மையும் அனைத்து இனங்கட்கும் மூலமும் முதலுமாக இருக்கிறது.

ஆனால், தமிழர்களிடம் ஏற்கனவே வலிவாக வேரூன்றிப் போன இறைமை உண்மையை ஆரியம் மதமாகக் கீழிறக்கம் செய்து இந்துமதமாக்கி இழிவு படுத்தியது. எனவே, இந்து மதத்தைத் தாக்குவதற்கு இறைமையையும் தாக்க வேண்டிய தேவை பெரியாருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று நாம் கருத வேண்டி உள்ளது. ஆனால் இதைப்பற்றியெல்லாம் நாம் அதிகமாகக் கவலைப் பட்டுக் கொள்ளத் தேவை அன்றும் இல்லை: இன்றும் இல்லை. ஆனால் தமிழின முன்னேற்ற முயற்சியாளர் களுக்கு இவைபற்றிய தெளிவுகள் தேவை! இல்லெனில் அம் முயற்சிகள் இறுதி வரை உறுதியாகவும் சரியாகவும் இருக்க இயலாது.

இனி, இத்துணையளவில், ஆரியக் கேடுகளை அழித்தொழிக்க வேண்டியிருந்த வலிமை தேவையாக இருந்ததால்தான் பெரியாரைத் தவிர வேறு எவரும் ஒரு போருணர்வு கொண்டு அதனோடு முடுக்கமாகப் பொருத முன் வ ரா து பின் வாங்கிப் போயினர். இந்த நிலையில் பெரியாரேனும் இதைச் செய்தாரே என்று எண்ணித்தான், சிறிது மாறுபாடான அவரின் கருத்து நிலைகளையும் நேரடியாக நாம் எடுத்துக் கூறி முரண்பட்டுக் கொள்ளாமல், நமக்குகந்த முறையில் — தமிழருக்குத் தேவையான — தனித்தமிழ் நாட்டுக் கொள்கையை நாம் அனைத்துக்கும் மேலாக உயர்த்திப் பிடித்துக் கொண்டு உரக்க முழக்கி வந்தோம்; வருகிறோம்; வருவோம்!

இத் தனித் தமிழ் நாட்டுக் கொள்கையும் கூட த மி ழி ன உணர்வுள்ளவர்களிடம் தான் தோன்றி வலுப்பெற முடியும். இனி, தமிழின உணர்வு தோன்ற வேண்டுமாயின் தமிழ்மொழி யுணர்வு மிக மிகத் தேவை. தாய்மொழி யுணர்வின்றி இன வுணர்வு தோன்றவே தோன்றாது; அவ்வாறு ஒருவேளை தோன் றினாலும் அது நிலைபெறாது; உறுதியாயிராது; என்றோ ஒரு நாளில் அது நீர்த்துப் போய்விடும். இனி, இனவுணர்வு வலுப் பெறாமல் நாட்டுணர்வு வலுப் பெறவே பெறாது. நாட்டுணர்வு வலுப் பெறாமல் தனிநாட்டுப் போராட்டம், விடுதலை முயற் சிகள் எப்படி வெற்றிபெற முடியும்?

ஆகவே, தனித்தமிழ்நாட்டு விடுதலை முயற்சியில் ஈடுபட்டு உழைக்கவும் போராடவும் முன்வரும் இளைஞர்களுக்கும் அறிஞர் களுக்கும் உண்மையான தூயதமிழ் உணர்வு கால் கொள்ளுதல் மிக மிக — வேறு எவற்றையும் விட — இன்றியமையாதது என் பதை நாம் முதற்கண் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்க.

பெருஞ்சித்திரனார் பாடலின் அறப்பண்பு

'இன்றைய உலகம் புரட்சி உலகம்' பாட்டில், பாவலரேறு,

''பொங்கும் வளமை! பொலிக பொதுமை!
பூக்கும் உரிமை விரைவிலே!
எங்கும் புதுமை! எவரும் சமன்மை!
எதுவும் இல்லை மறைவிலே! — 'தென்மொழி'
சுவடி 20 — ஓலை 7 —

என்று கூறியுள்ளார்.

நம்பிக்கை சுரக்கும், நயன்மை ஒளிவீசும் வரிகள். சொற் செட்டும் கட்டும் உள்ள பாட்டுகள் எழுதுவதில் வல்லவர் என்பதை ஒவ்வொரு பாடலும் விளக்கும்.

பேரா. தமிழண்ணல், 'பெருஞ்சித்திரனார்க்கு நிகரான பாவலர் இல்லை' என அண்மையில் அவரைச் சந்தித்துப் பேசிய போது கூறினார். ஆயினும், அவர் பாடலைச் சான்று பகரவும் அஞ்சுகின்றவரையே இக்கால இலக்கிய மேடையில் அதிகம் காண்கிறோம். இதற்குக் காரணம், பாவலரேறு பாடல்களில் உள்ள புரட்சி வீறுதான் போலும்!

அறம் ஓதும் நெஞ்சம், கொடுமை தாங்காத உள்ளம், ஆற்றாமையால் நொந்து பாடும் போது, ''தரை பிளந்து விழுங்கு வாயே!'' என்று வருந்துவ தியல்பே!

''இலங்கையிலே தமிழமக்கள்'' படும்பாடுகண்டும், மகிழ்ச்சி பாடியும், கதையளந்தும், விழாக்கண்டும், யாழ் மிழற்றியும், பொன் புனைந்தும், கலை, காட்சி நடத்தியும், அரசு விழாக் கொண்டாடியும் திரியும் தமிழ் நிலத்து அவலம் கண்டு, அன்னைத் தமிழ் நிலத்தைக் கூவி,

---

(முன் பக்கத் தொடர்ச்சி

இவ்வுணர்வின்றி ஈடுபடும் எந்த இளைஞரும் அறிஞரும் தலைவரும், தமிழினத்தை முன்னேற்றவும், தமிழ்நாட்டை விடுதலை செய்யவும் இயலவே இயலாதென்க. அவ்வாறு ஒரு வேளை — இற்றைநாள் விளைவேறி, வெளியேறிவரும் கருவிகளைக் கொண்டு போராடி வெற்றிபெற்றுத் தனித்தமிழ் நாட்டைப் பெற்றாலும், அது மீண்டும் ஆரியத்திற்கே அடிமைப்பட்டுக் கிடக்கும் என்பதைக் கடந்த மூவாயிரம் ஆண்டுக்காலத் தமிழ், தமிழின தமிழ்நாட்டு வரலாறுகளையும், உலக நாடுகளின் விடுதலை வரலாறுகளையும் உணர்ந்தவர்கள் தவிரப் பிறர் எவரும் மாறுபட்டும் வேறுபட்டுமே இயங்குவர்; இறுதியில் மீண்டும் ஆரியத்துக்கும் அடிமைப்பட்டே கிடப்பர் என்பதை உறுதியாய் நெஞ்சில் நிறுத்துக.

— (தொடரும்)

"எமைச் சுமக்கும் தமிழ்நிலமே! இவைபொறுக்க
இயல்கிலையே! தரைபிளந்து விழுங்குவாயே!"

என வேண்டுகின்றார். அறம் சான்றமனத்தின் வெளிப்பாடு எப்படியிருக்கும் என்பதற்கு இப்பாடலும் ஒரு சான்றே.

(சுவடி 23, ஓலை 6)

பாவலரேறு அறத்தின் பிடியில் உள்ளவர். அதனின்றும் அவரை மீட்டெடுக்க முடியாது. அறம் மெய்; அறம் தமிழ். அதில் கரைந்து போனவரை நாம் திசைமாற்ற முடியாது. இருள் ஒளியைத் தடுக்கவோ, திசைமாற்றிவிடவோ வல்லதன்று "இருள் உனக்கு விடியுமா?" என்ற பாடல் தலைப்பு, (சுவடி 22, ஓலை1) தமிழ்நாட்டுக்குள் பரவியுள்ள இருள்தான் அவர்க்குத் தடை. அந்த 'இருள்' அவரை 'அழியச் சூழும்' எனினும், அவர் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பவர். இதனை அவர் பாடுகின்றார்....

"பழியைக் கூறி இழிவைக் கூறிப்
பரக்க எழுதிப் பரப்பினாலும்
வழியைத் தடுத்தென் திசையை திருப்ப முடியுமா?
[— அட,"

பழிக்கும், புகழ்ச்சிக்கும் ஆளாகியபோதும், அறத்திலிருந்து கொண்ட கோட்பாட்டிலிருந்து விலகாதவராகப் பாவலரேறு தம் பாட்டின் மூலம் நிறுவுகின்றார். அடுத்து,

"உமிழந் தக்கார் பலருளார் எனினும்
உண்டடா மறவரும் என்போல்! — தமிழ்
உறவைக் காப்போம் கண்போல்!"

என்கிற "குற்றச் சாட்டாம், நடவடிக்கைகளாம்!" பாட்டில் (தென்மொழி சுவடி 22; ஓலை:4) அவர் சார்ந்து நிற்கும் புரட்சியுள்ளம் புலப்படுகிறது.

"முறையாய்ச் செய்யும்பெ தாண்டுக் கிங்கே
முட்டுக் கட்டைகள் போட்டால் — ஒரு
முடிவும் காண்போம் வேட்டால்!"

சட்டமுறை, நெறிமுறை, உலகியல் தெரிந்து செயல் படுகின்றவரையும் குற்றம் சாட்டிக் கொடுமை செய்ய முயன்றால், 'வேட்டால் விடிவு' காண்போம் என்கிறார். ஆக, அரசுதான் கருவிப்போர் நிகழ்வதற்குக் காரணம் என்பது தெளிவாகிறது. நாமும் படைக்கப் போகும் அரசுக்காகக் கருவிப்போரை மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்! தம் அறத்தின் நினைவைப் போர்முழக்கத்தின் போதும் கைவிடாதவர்.

— பறம்பை அறிவன்.

சென்னையில் 22.5.88. அன்று நடைபெறும்

தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமை மாநாடு என்ன கோருகிறது ?

தமிழ் இனத்தின் மொழி உரிமை, அரசியல் உரிமை, பொருளியல் முன்னேற்றம், பண்பாட்டுப் பாதுகாப்பு, குமுக நயமின்மை ஒழிப்பு போன்றவற்றிற்கு அரணான கருத்துகளைப் பெருமக்கள் வழங்குவார்கள்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மக்களின் தாயகம் தமிழ்நாடு. இந்த நாட்டிலே :—

1. தமிழே எல்லாத் துறைகளிலும் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்.
2. தமிழே அனைத்து நிலைக் கல்விக்கும் பயிற்றுமொழியாக விளங்கிட வேண்டும்.
3. ஆட்சியிலும் கல்வியிலும் மட்டுமல்லாமல், - வாணிகம், தொழில், கோயில் வழிபாடு, இசை போன்ற அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும்.
4. பிழைப்புத் தேடித் தமிழகத்திற்கு வருகின்ற பிறமொழியாளர்கள் தமிழைக் கற்றுக்கொண்டு, தமிழில் மட்டுமே தங்கள் செயல்களை நடத்திட வேண்டும்.
5. தமிழ் மக்கள் மட்டுமே இங்கே சொத்து வாங்கவும் தொழில் நடத்தவும் ஆட்சிப் பொறுப்பு ஏற்கவும் உரிமை பெற வேண்டும்.
6. கலை, இலக்கியம், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் தமிழரின் மரபுரிமைப் பண்பாட்டுக்கு முரணான செய்திகள் பரவுவது அருவருப்பு (ஆபாசம்) என்று தீர்மானித்துத், தமிழ்நாடு அரசு அவற்றைத் தடைசெய்ய வேண்டும்.
7. தமிழகத்திற்கு என்றே சிறப்பான பொருளியல் திட்டம் வகுக்கப்பட வேண்டும். அது, தமிழர்களின் தொழில்—வணிக வாய்ப்புகளுக்கு முதல் உரிமை அளிக்க வேண்டும்.
8. இந்திய நடுவண் அரசு இனவழி மாநில அரசுகளுக்கு முழு உரிமை வழங்கி, —பல தன்னுரிமை அரசுகள் இணைந்த கூட்டாட்சியாக இயங்க வேண்டும். இயலாதெனில் மாநிலங்களைத் தனியே விட்டுவிட வேண்டும்.
9. தமிழ் வாழ்வின் அனைத்துத் துறைகளையும் இறுக்கிக் கொண்டுள்ள மேல்சாதி— மேல்பிரிவினரின் பிடி தளர்ந்து, உழைப்பாளர் பிரிவு ஆட்சியில் அமர்வதற்குரிய எல்லா முயற்சிகளிலும் தமிழ்மக்கள் ஈடுபட வேண்டும்.
10. படித்த தமிழர்கள்,— ஓரளவு வாழ்க்கை வசதி பெற்ற தமிழர்கள்,— உழைக்கும் பிரிவுத் தமிழர்களின் உயர்வுக்கான போராட்டங்களை நடத்தித் தமிழ் மக்களிடையே உள்ள ஒட்டுணிகளான மேல்சாதி — மேல்பிரிவினரை ஒதுக்கி இங்கே ஓர் ஒட்டுமொத்தமான தமிழ்ப் பேரெழுச்சிக்கு வழி வகுக்கவேண்டும்.

Scanned with CamScanner

சொல்லாய்வறிஞர்.

அருளியாரின் சொல்லாய்வுகள்.

1. மீனாட்சி.

மீனாட்சி < சமற்கிருதம். :கயற்கண்ணி, கயல்விழி. (ஒரு குறு விளக்கம்: 'மின்' (மின்னு — ஒளிறு) என்னும் ஒளிக் கருத்தடிப்படைச் சொல்லடியினின்று தோன்றிய சொல், 'மீன்' என்பதாகும்.

விண்ணில் மின்னும் உடுவை (நட்சத்திரம்) 'மீன்' என்பதும் இவ்வொளிக் கருத்துப் பற்றியே!

ஒ. நோ: பதியிற் கலங்கிய மீன். (குறள் 1116)

விண்மீன் ஆனது, அதன் ஒளி விளக்கச் சிறப்புத் தகுதி நோக்கி, 'அம்' என்னும் பெருமைப் பொருள் பின்னொட்டுப் (Augmentative Suffix) பெற்று, 'மீனம்' என்றவாறும் வடிவெய்தி வழங்கலுற்றது.

ஒ. நோ: மீனத்து இடைநிலே. (மணிமேகலே: 11: 42)

அதேபோல், நீரில் மின்னுவது பற்றி, 'மீன்' என்ற வடிவம் அவ்வகை நீந்துயிரியைக் குறிக்கத் தோன்றி நீந்தியது.

மீன் கண்டம், மீன்காரன், மீன்காரி, மீன்குழம்பு, மீன் கொத்தி, மீன்குஞ்சு, மீன்பறி, மீன் முள் போன்று வழக்காற்று வடிவங்களில் இச் சொல்லின் மரபு ஆட்சியைக் காணலாகும்.

மீன் குறியைப் பொறித்த கொடியை உடைய பாண்டியன், 'மீனவன்' என்றும் அழைக்கப் பெற்றமை இங்குக் கருதற்குரியதாகும்.

கருவாடு 'மீன் உணங்கல்' என்னும் விளக்க வடிவிலும் வழங்கப் பெற்றது.

ஒ. நோ: பன்மீன் உணங்கற் படுபுள் ளோப்புதும். அகம்: 80: :6)

மீன் எண்ணெய் (Oleum pisces, Oleum morrhuac) என்று தவறுக வழங்கும் இன்றைய வடிவும், பண்டையில் (மீன்நெய்) மீனெய் என்றவாறே செப்ப வடிவு பெற்று, வழக்காற்றில் இருந்தது.

ஒ: நோ: மீனெய்யொடு நறவு மறுகவும். (பொருநரா: 215)

மீன்களில் ஏறுபோன்ற திமிலுடைய (சுறவு) சுறு, 'மீனேறு' என்றும் அழைக்கப் பெற்றது.

ஒ: நோ மீனேறுயர்த்த கொடி. (சீவக. 6)

விண்மீனையும் நீர் மீனையும், ஒளிக்கருத்தடிப்படையில் குறித்தெழுந்த 'மீன்' என்னும் செந்தமிழ்ச் சொல்லே, மீன (Meena) என்றவாறு பலுக்கியும் எழுதியும் சமற்கிருத வாணர் பயன்படுத்திக் கொண்டனர்.

'மீ' என்னும் சொல்லே, மூலமாகவும் அதற்குப் பக்கத்தில் இட்டுக் காட்டியுள்ளனர். ஆனால் 'மீ' என்னும் வடமொழி

Scanned with CamScanner

மூல வேர்க்கு, — குறை, குறைவாக்கு, வழி, மறை, சா, வழியை இழந்துபோ, மீறு, மாற்று என்றவாறே பொருள்கள் உள — அவற்றை மட்டுமே அவர்கள் குறிக்கின்றனர். 'மீனம்' என்ற சொல்லுக்கு அவர்களிடம் மூலமுமில்லை; விளக்கமுமில்லை.

இதை, மிக மிக வெளிப்படையாகவும் நுட்பமாகவும், "இம் மூலம் மிகவும் ஐயப்பாட்டிற்குரியது (Very doubtful)" என்று அறிஞர் மானியர் வில்லியம்சு அவர்கள் தம் குறிப்பில் குறிப்பார்.

இத் தூய செந்தமிழ்ச் சொல்லான் 'மீன்' என்பதனொடு அட்சம் (Aksha) என்னும் கண்ணுக்குரிய சமற்கிருதச் சொல்லைப் புணர்த்திப் பிணைத்து, 'மீனாட்சி' என்றவாறு ஓர் இருபிறப்பிச் சொல்லைத் தோற்றுவித்துள்ளனர் வடவர்.

மீனாட்சி — மீன் போலும் கண்களையுடையவள்.

இவ்வாறே பல அண்டு வேலைகளையும் இந்நிலைகளில் செய்துள்ளனர்.

காண்க: காமம் (தமிழ்) + அட்சம் (சமற்கிருதம்) >
— காமாட்சி = காமக் கண்களையுடைவள்,

2. குடோன் < ஆங்கிலம்:

குடோன் < ஆங்கிலம் (Godown) கிடங்கு, சரக்கறை, பண்டமனை.

(குறிப்பு: Godown என்னும் இந்த ஆங்கிலச் சொல்லானது நிலக்குடைவு அறையைக் குறித்த 'கிடங்கு' என்னும் தூய செந்தமிழ்ச் சொல்லினின்று தோன்றியதாகும்.)

நிலத்தில் அகழ்ந்து தோண்டப் பெற்ற அறைப் பகுதி கிடங்கு என்றும், கிடங்கில் (கிடங்கு + இல்) என்றும் அழைக்கப் பெற்றது.

ஒ. நோ: 'தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயில்' (புறம்: 350:1)

இயற்கையாகக் குடைவுற்றிருந்த நிலவறையும் கிடங்கு எனப் பெற்றது.

ஒ. நோ: 'கிடங்கும் நீரின்மையிற் கன்றுமேய்ந் துகளும்' (புறம் 355: 1-2)

பண்டையில், பண்டங்களைக் காத்து வைப்பதற்கு, நிலக் குடை வறை வெட்டிச் சமைத்து (உருவாக்கி), அதனைக் காப்புக் கூடமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

அதன் மரபிழையையும் தொடர்ச்சியையும், 'நூல் கிடங்கு' போன்ற, இன்றைய பரவலான வழக்காறுகளிலும் தெள்ளெனத் தெளியக் காணலாகும். இஃதை அறிய வாய்ப்பில்லாத (ஏனெனில் தமிழரில் எவருமே, இது போலுள்ள பல்லாயிரம் மெய்ச் செய்திகளில் ஒன்றையேனும் உலகப் பார்வைக்குக் கொண்டு செலுத்தும் முயற்சியையே இதுவரை முறையுற

Scanned with CamScanner

மேற்கொள்ளாமையின் —) ஆங்கிலேயர். அச் சொல் தெலுங்கினின்று வந்திருக்கலாம் என்றவாறு மூலங் காட்டுகின்றனர்.

(Oxforb) எருதந்துறைப் பல்கலைக் கழக அகராதியில் (C. o. d), அவர்கள் காட்டியுள்ள பொருளையும் காட்டியுள்ள மூலங்களையும் கண்டு உண்மையுணர்க.

Gobown: Ware house in parts of E. Asia, esp. in India [F. Port: gudao, f, Malay: godong, gadong. Perh. fr. Telugu

gibangi = Place where goods lie. kidu = lie]

மலைய நாட்டொடு (Malaya) தமிழர்கள் கொண்டிருந்த பரந்த வணிகத் தொடர்பால், அம் மொழிக்கண் 'கிடங்கு' என்னும் தூய செந்தமிழ்ச் சொல் 'godong' என்ற வடிவுற வழங்கப் பெற்றுள்ளது. அச் சொல்லின் ஒலிப் படிவையே வணிகத் தொடர்பில் உள்நுழைந்த ஆங்கிலேயரும் எடுத்து ஆண்டு கொண்டு தம் மொழிக் கண்ணும் பயன்பாடு கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படைச் சாறத்தையே சிறிதும் உணராத, அன்றைய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியைத் தொகுத்த மேம்போக்குப் பேராசிரியர் குழு அந்நூற்றொகுதியில், 'கிடங்கு' என்னும் சொல்லுக்கு மூலமாக, 'Gadong' என்ற மலாய் மொழிச்சொல் வழக்கையே பதித்துக் காட்டியுள்ளது.

(அடிப்படை. 'இவை தமிழல்ல' — நூல்)

தொண்டு செய்ய நல்வாய்ப்பு!

தொண்டுள்ளமும், தூய தமிழ் உணர்வும், தமிழ் இலக்கண இலக்கிய அறிவும், நல்ல ஆங்கில எழுத்து, பேச்சு ஆற்றல்களும், ஓரளவு அச்சுத் தொழிலறிவும், மேலாளுமைத் திறமும் கடமையுணர்வும் பொறுப்பாண்மையும், எடுத்தாற்றிச் செய்யும் செயல் திறனும் கொண்ட ஒருவர் தென்மொழி அமைச்சர் பணிக்குத் தேவை. கல்வித்தகுதி : குறைந்தது இளங்கலை (B.A.,) பட்டப் படிப்பு, துணைத் தகுதிகள் கவனிக்கப் பெறும்.

மாதச் சம்பளம் : உருபா 500; ஆண்டு உயர்த்தம் 25 உருபா

தேர்வு பெறுபவர்கள் உடனடியாக உருபா 1,000 பொறுப்புத் தொகையாகச் செலுத்திப் பணியில் சேரவேண்டும். பணியை ஒப்புக்கொண்டவர்கள் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு ஒப்பந்த முறையில் பணியாற்றுதல் வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் தம் கல்விச் சான்றிதழ்கள், பிற தகுதிச் சான்றிதழ்கள் இவற்றின் படப்படிகளுடன், தம் சொந்தக் கையெழுத்தால் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய வேண்டுகைப் படிவத்துடன் உடனே 'ஆசிரியர், தென்மொழி, சென்னை-5' என்னும் முகவரிக்கு விடுத்திடல் வேண்டும். — அமைச்சர்.

-- அறம் பாடுகின்றோம் --

- வள்ளிகேள்வன் -

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்;
நற்றமிழர் மேன்மைக்கே உழைத்து வாழ்வோம்!
ஏமாற்றிச் சுரண்டிவாழ் வடவோர் எம்மை
இனிமேலும் ஆள்வதற்கிங் கொப்ப மாட்டோம்!
தீ,மாற்றி மாற்றியெமை எரிக்கும் போது
தேசியமா பேசிடுவோம்? சீறிப் பாய்வோம்!
ஏமாப்பொன் றில்லாமல் ஏடெடுத்தே
இருந்தமிழால் அறம்பாடு கின்றோம் நாமே!

இரும்பொருளும் பதவிகளும் கொடுப்பாரேனும்
இனங்காட்டிக் கொடுக்கின்ற புன்மை ஏலோம்;
தரும்பொருளால் எட்டப்பர் தமைவளைத்தே
தருக்குவார் வலிமைக்கிங் கஞ்ச மாட்டோம்;
வரும்பொருளால் வண்டமிழ்க்கோர் நன்மை உண்டேல்
வழங்குவதே கடமையாக் கொள்வோம்; மேன்மைப்
பரம்பொருளை நம்பினோம் தளர்வொன் றில்லோம்!
பகுத்தறிவே துணையாக நடக்கின் றோமே!

இருந்தேநாம் தமிழனாய் என்றும் வாழ்வோம்;
இந்தியர்நாம் எனும்பொய்மை ஏற்க மாட்டோம்;
பொருந்தாத தேசியத்தின் புரட்டை மூடிப்
புண்ணுக்குப் புனுகதனைப் பூச ஒப்போம்;
மருந்தேபோல் நஞ்சுதனைப் பொதிந்து நல்கும்
மதக்கொள்கை தொல்கதைகள் தீயில் தீய்ப்போம்!
பருந்தேபோல் பகைவர்தாம் செல்வம் கொள்ள
பார்த்துநாம் இருப்போமா? ஆர்க்கின் றோமே!

இந்துமதம் என்னும்கீழ்க் கயமை இன்னும்
இன்றமிழ்நாட் டினில்வழங்கப் பொறுக்க மாட்டோம்;
சொந்தமதி உள்ளவர்நாம்; சிறுதெய் வங்கள்
சொறிபிடித்த சொலவங்கள் ஏற்போம் அல்லோம்!
மந்தமதி எட்டப்பர் துணைமேற் கொண்டு
வடவோர்தம் இந்திமொழி ஊன்றச் செய்யும்
அந்தநெடுங் கொலைச்செயல்கள் அறுத்துச் [சாய்ப்போம்!
அதற்கன்றோ அறம்பாடி அறைகின் றோமே!

சொல்லாய்ந்து மொழியாய்ந்து வரலா றாய்ந்து
தூயதமிழ்ப் பாவாணர் மற்றும் சான்றோர்
நல்லாறு நல்குநறுந் தமிழ்மு தன்மை
நாட்டினார் மெய்யாக; யாவ ரேனும்
செல்லாத செத்தமொழிப் பெருமை இந்தச்
செந்தமிழ்நாட் டினில்ஊன்ற முனைவர் என்றால்
வல்லூறு போற்கிழிப்போம்; ஓய மாட்டோம்
மானத்தில் தமிழ்மானம் பேணு வோமே!

காவிரியும் நாமிழந்தோம்; நாட்டில் மல்கு
கனிமவளம் அதனுரிமை இழந்தோம்; பார்ப்புக்
காவிகளால் கோயில்களில் தென்றல் கொஞ்சும்
கனித்தமிழின் மெய்யுரிமை இழந்தோம்; கச்சத்
தீவுரிமை தானிழந்தோம்; கடலால் வாழும்
தென்கோடி மீனவர்கள் வாழ்விழந்து
நாவுரிமை நாமிழந்தோம்; ஒவ்வொன்றாக
நாள்தோறும் இழப்பதற்கா பிறந்தோம் நாமே?

வாழ்வதற்கே நாம்பிறந்தோம், அடிமை யாகி
வடவர்க்குக் குற்றேவல் செய்து செய்து
தாழ்வதற்கா பிறப்பெடுத்தோம்? உடன்பிறந்த
தாயினத்தார் ஈழத்து மண்ணில் நொந்து
வீழ்வதற்கே தில்லியார் வகுத்த பின்னும்
விடுதலைக்கே குரல்கொடுக்க அஞ்சி நின்றால்,
பாழ்வயிற்றுச் சோற்றுக்கே இழிந்தோம் அன்றே!
பழந்தமிழின் இனத்தோரே எழுவீர் இன்றே!

நாடற்றோம் எனும்கீழ்மை நிலைதாம் இன்னும்
நமைவாட்ட நாம்வீழ்ந்து மாய்வோம் அல்லோம்;
ஏடுற்றோம் ஏட்டினிலே எடுத்தியம்பும்
ஏற்றமும் இன உணர்வும் வீறக் கொண்டோம்!
பாடுற்ற உழைப்பெல்லாம் வடவோர் கொள்ள
பார்த்துநாம் இனிமேலும் இருப்போம் அல்லோம்!
வீடுற்ற குடிக்கொருவன் ஆர்க்கும் பொன்னாள்
விடிகின்ற காலமுமே' அணியம் அன்றே!

தமிழ்நிலத்தைத் தனிநாடாய் ஆக்குதற்குத்
தமிழினத்தார் ஆர்த்தெழவே அறம்பு கன்றோம்;
நமைப்புரக்கும் இறைமையே புறம்பும் உள்ளும்
நாவினிலும் பொருந்துவதால் அச்சம் இன்றி
தமிழெடுத்தே அறம்பாடி எழுந்து நின்றோம்
தமிழினமே! அடிமைப்பண் பாடிப் பாடி
சுமைஎடுத்துக் குனிந்திருந்த கீழ்மை போதும்
தொடர்ந்தெழுவாய் அரிமாப்போல் விடுதலைக்கே!

சீனாவில் தமிழ்க் கல்வெட்டு.

சீனாவில் காண்டன் என்னும் இடத்தில் தமிழ் மற்றும் சீன எழுத்துகளைக் கொண்ட கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும், இது 1281-ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்றும் தில்லி, பல்கலைக் கழகப் பேராசிரியர் பர்: டி. தேவகூட்டி கூறினார். இவர் பண்டைய இந்தியா மற்றும் தொடக்கக் காலத தென்கிழக்கு ஆசிய வரலாற்றில் தனிப்புலமை பெற்றவர்.

(அட்டை 4-ஆம் பக்கம் தொடர்ச்சி)

தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்க மறுத்தோரும், இழித்துக் கூறியோரும் கூட இன்றைய வேளைகளில் ஏற்க முன்வந்துள்ளனர் என்றால் அதற்கு அரசு ஆணையே காரணியம். (எழுத்துச் சீர்திருத்தத்தில் தங்கள் கருத்து வேறு என்பதனையும் அறிவேன்.)

எனவே, ஆட்சி மாற்றத்தாலும், அரசு ஆணையாலும்தான் மொழியில் சிறு மாறுதலைக் கூடச் செய்ய முடிகிறது. நமது தமிழ் நிலம் வடபுலத்தாரின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிற வரையில், மொழித் தூய்மை, தூய்மையான மொழி வழக்கு அவ்வளவு எளிதான செயலன்று என்பதனைவிட முடியாத செயல் என்பதே எனது திண்ணமான முடிவு.

எனவே, தங்கள் முயற்சியில் மொழித் தூய்மைக்கு உழைப்பதைப் போல, பலநூறு மடங்கு தமிழ்நில மீட்சிக்கு உழைக்க வேண்டும். தமிழ்நில மீட்சியில்லாமல், தாங்கள் செய்யும் முயற்சிகள்யாவும் விழலுக்கு இறைத்த நீராகச் — செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்து விடக்கூடாதே என்ற நல்லெண்ணத்திலேயே மீண்டும் மீண்டும் எழுதுகிறேன். முதலில் நில மீட்சியே. அதற்கான புரட்சியே.

எனவே, இனியும் நாட்களைத் தாழ்த்தாது, மற்ற ஒப்போலைக் கட்சிகளை நம்பாமல், நீங்களும், ஏனைய இனமீட்சி இயக்கத் தலைவர்களும் ஒன்று கூடி, ஒரு நல்ல பாதையை — புரட்சிப் பாதையைக் காட்டுங்கள். அடிமைத் தளைகளை அடித்து நொறுக்கி, அன்னைத் தமிழை அரியணை ஏற்ற சாதி, சமய வேறுபாடற்ற குழுகாயத்தை அமைக்க ஒருங்கிணைந்து வழி காட்டுங்கள். அன்புடன். — களந்தை — குமரன், திருநெல்வேலி.

○: 1289: அன்பிற்கும் மதிப்புக்குரிய ஐயா, வணக்கம். 'தென்மொழி', 'தமிழ்நிலம்', 'தமிழ்ச்சிட்டு', ஏடுகள் வாயிலாகத் தாங்கள் நிகழ்த்திவரும் புரட்சி புதிய வரலாற்றைப் படைப்பதாகும். குறிப்பாகத் 'தென்மொழி', சுவடி 24 ஓலை 3 இதழில் தாங்கள் விடுத்திருக்கும் 'சாவம்' உறுதியாக நிறைவேறும் உரமும் திறமும் மிக்கதாகும். "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது" என்ற குறள் மொழி பொய்க்காது. அன்பன்

— அரு. கோபாலன், ஆசிரியர் 'எழுகதிர்' சென்னை - 94.

○ : 1290 : போற்றுதலுக்கும் வணக்கத்திற்கு முரிய தமிழ்ப் பெரியார் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு எழுதும் அஞ்சல் ...

தாங்கள் வந்து நிகழ்த்திய சொற்பொழிவு பயனுள்ள வகையில் அமைந்தது. எழுச்சியும் வீறும் நிறைந்த தங்களின் சொற்பெருக்கு சோர்ந்துகிடந்த தமிழ் நெஞ்சங்களை நிமிர்த்தியிருக்கின்றது. இவண், பர். ஆறு. அழகப்பனார், தமிழ்த்துறை

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

Scanned with CamScanner

o : 1291 : அன்பின் நிலவே, அறிவுக்கடலே, கடந்த இதழ் தென்மொழியில் ''இட்டசாவம் முட்டுக''—பாடல்—அன்று; படை முழக்கம்! கடல் கொந்தளிப்பு! எரிமலையின் வெடிப்பு! கண்ணுற்று நெஞ்சம் நெருப்பாக மாறினேன். கொடியன் இராசீவ்—கொலை மகன்—வெந்துற்று வேரற்றுப்போக ஆர்த்த அனற் பொறி, கண்ணகி அன்று இட்ட சாவத்தினும் மிஞ்சியது. செங்குட்டுவனின் வீரத்தையும் விஞ்சியது. ஒட்டுமொத்தமாக ஈழத் திருநாட்டில் இடரில்—இன்னலில் இன்னுயிர் துறந்த—துறந்து கொண்டிருக்கும் பழியற்ற பால் நிலவுகளின்—படர் கொடிகளின் உள்ளக்கொதிப்பை—உணர்வுக்கனலை, நெஞ்சக் குமுறலை உலகோர்க்குப் படம் பிடித்துக் காட்டி விட்டீர்கள்! அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றன்றோ! இதனை அவன் அன்னை கண்டாளன்றோ? மறந்தானோ மடையன்? பழிமகன் அழிக, ஒழிக!

அன்பன், —அருள்மணி, பெங்களூர்-21.

O : 1292 : வணக்கத்திற்குரிய பாவலரேறு அய்யா அவர்கட்கு, வணக்கம். நலம். நலமும் மலர்க. நான் 18.4.88. முதல் 30.4.88. முடிய கடலூரில் 12-ஆம் வகுப்பு, தமிழ்த்தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப்பணியில் இருந்தமையாய் இல்லம் வந்தபிறகே தங்களின் செப்பமும் திட்பமும் செறிவும் சான்ற ஆய்வு வினாக்களுக்குரிய விடைகளைக் காண நேர்ந்தது.

பெரிதும் மகிழ்ந்தேன். நன்றிக் கடப்பாடுடையேன். உரிய இடங்கள் இவற்றை என் ஆய்வுரையில் இணைத்துக் கொள்வேன். நேரம் ஒதுக்கி, அரிய கருத்துரைகளை வழங்கியிருக்கிறீர்கள்.

இவ்வினாக்களும், விடைகளும் முறைப்படி 'தென்மொழி'யில் வெளியாகக் கூடுமென்று நம்புகிறேன்.

கட்டுரைகள் எழுதிக்கொண்டு வருகிறேன். இன்னும் சிலரை நேருரை காண எண்ணியுள்ளேன். 1989-இல் ஆய்வேட்டைப் பல்கலைக் கழகத்தில் அளித்து விட வேண்டும்.

...'இட்ட சாவம் முட்டுக'-என்ற பாடல் தங்களின் அஞ்சாத நெஞ்சுரத்தைப் பறை சாற்றும் பெற்றியது! இப்படிப் பாட வேறு எவருக்குத் துணிவு வரும்? அடிமைத் தனத்தில் தோய்ந்து, மக்களை ஏய்த்துப் பிழைக்கும் கலையில் வல்லவர்களுக்கெல்லாம் இத்தகைய உணர்வு பிறக்குமாமோ? உங்களின் தனித்தன்மையை நிலை நாட்டியுள்ளீர்கள்! எப்படிப் பாராட்டுவதென்றே எம்போன்றோர்க்குப் புலப்படவில்லை. இவண்,

தங்கள் அன்புள், —கடலூர் மணிமாறன். கிருட்டிணராயபுரம்.

---

o நம் பொறுமை நம் வேகத்தை விட மிகுதியான வெற்றியைத் தருகிறது. — எட்மண்டு பர்க்

o நல்ல முறையான அனைத்துச் செயல்களும் நல்ல அடிப்படையைத். தருகின்றன. — எட்மண்டு பர்க்.

O வரலாறு என்பது சிறந்த பலருடைய வாழ்க்கைப் பிழிவு.

— தாமசு கார்லைல்.

சென்னையில், அறிவியக்கப் பேரவை நடத்தும்

தமிழ்த் தேய இனத்தின் வாழ்வுரிமை மாநாடு!

காலம், இடம்: 22-5-88, பாவாணர் நூலக அரங்கம்

பேரா. சாலை இளந்திரையனார்

பேரா. சாலினி இளந்திரையனார்

பாவலரேறு பெருஞ்சித்திரனார், ப. நெடுமாறன்

ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மற்றும் முனைவர் க. ப. அறவாணன், முனைவர் இளவரசு, பாவலர் இன்குலாப், தி. இராமதாசு, பெ. மணியரசன், முனைவர் தமிழ்க்குடிமகன், எசு. வி. இராசதுரை, முதலியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

(32-ஆம் பக்கம் தொடர்ச்சி)

குளத்திலும் ஒருசேர நீராடுவர். (சிறுபாணு: 117, பொருந: 240, மதுரைக்: 264) கவண் எறிவர், முரசு அறைவர் (குறிஞ்சி: 43)' நிலத்தை வெட்டுவர், நெல் விளைப்பர், உரல் இடிப்பர். (பெரும்பா: 90 — 97). பெண்டிர் போர்க்களம் செல்வர். பாசறைகளில் ஒளிஉமிழ் விளக்குகளை ஏற்றுவர். (முல்லை: 45 — 46).

இவ்வாறு அனைத்துத் துறைகளிலும் சம உரிமை பெற்று வாழ்ந்த பெண்டிர் பிற்காலத்துத் தம் உரிமையை இழந்து அடிமையாகி விட்டதை இலக்கியங்களும் பிறவும் காட்டுகின்றன'

பெண்ணடிமைத்தனங்கள்:

பெண்களை நம்பவே கூடாது; அவர் கூறுவதை உண்மை எனக் கொள்ளக்கூடாது என்கிறது ஏலாதி என்ற அறிவிலக்கியம் (5). பெண் பேச்சைக் கேட்காதவன் கடவுளாகக் கருதப்பட்டான். சம நிலையில் புகழ்பெற்ற மேதை 'திருவள்ளுவர்'கூடப் பெண்வழிச் செல்லுவது குற்றம் என்று பெண்வழிச் சேறல் என்னும் தனி அதிகாரமே வகுத்தார்.

பின்னர் பெண்ணின் மேல் உள்ள வெறுப்பு பெண் குழந்தை மேல் வெறுப்பாக வளர்ந்து பெண் குழந்தை பெறுவதையே வெறுக்கத் தொடங்கிய காலம் உருவாகத் தொடங்கியது.

பெண்டிர்க்குச் சிந்திக்கும் ஆற்றல் இல்லை என்று அக்காலத்தார் கருதினமை தெரிகிறது.

நுண்ணறிவு உடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறிவு என்பது பெரும்பேதைமைத்தே!

என்ற பிற்கால மேற்கோள் 'பெண்டிர் நூல் பல கற்பினும் பேதையரே' என்று காட்டுகிறது. 'பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்', 'பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்' 'தையல் சொல் கேளேல்' ஆகிய மொழிகள் பெண்டிரைப் பற்றி இடைக்கால மக்கள் கொண்டிருந்த கோட்பாட்டைக்குறிக்கும். (வளரும்)

Scanned with CamScanner

நூல் மதிப்பீடு : 2.

செயலும் செயல் திறனும்.

பறம்பை அறிவன்.

(பாவலரேறு அவர்களின் 'செயலும் செயல் திறனும்' நூல் வெளியீட்டு விழா கடந்த 16-3-88 அன்று, சென்னை, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலரங்கில் உயர் நெறி மன்ற வழக்கறிஞரும், 'செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழு'த் தலைவரும் ஆகிய திரு நா. நல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் நூலை மதிப்பிட்டு அறிஞர் பலர் உரையாற்றினர்கள். அவ்வுரைகளில் ஒன்று இது. பிறரின் திறனாய்வுரைகளும் அவ்வப் பொழுது வெளியிடப்பெறும்.)

முன்மொழிவுரையில் சொல்லாய்வறிஞர் ப. அருளி கூறியபடி இந்நூலைப் பயில்வார் 'உருப்பட்டு உயரலாம்.' தமிழினத்தின் மீது தாயன்பு கொண்ட பாவலரேறு, இளைய தலைமுறையை நோக்கிக் கூறிய வண்ணிப்புகள் அருளியுரைத்தாற் போல, இந்நூலைக் 'கழிவிரக்கங் கொண்டு' யாத்தளித்தனர் என்பதை உறுதி செய்யும்!

'கையேடு' எனப் போற்றப் பெறும் 'செயலும் செயல் திறனும்' "படித்த அளவிலேயே முற்ற விளங்கித் தோன்றும் அல்லது புரிந்துவிடும் பான்மைத்தாக இல்லாமல் உற்று உற்று உள்நோக்கிப் படிக்க வேண்டிய தன்மைத்தாகவுள்ளது" என்பார் அருளியார்!

மாணவர்க்கு வாழ்வியலை விளக்குவதில், பாவலரேறு நடையில் உள்ள எளிமை, தெளிவு, நுட்பம் வேறெவர்க்கும் அமையாத தனித்தன்மையுடையதாகும்!

'பதினைந்து வகைகளிலும் திருக்குறளைப் பாராட்டியுள்ளார்' என்பார் அருளி. 'திருமறை' (பக் : 72) என்று போற்றிக் கூறியதையும் 'எண்ணிப் பார்க்க' விட்டுவிட்டார் அருளி. ஆகத் தகவறிந்து சொல் பாராட்டும் பாவலரேறு திருக்குறளையும், திருவள்ளுவரையும் இதற்கு மேலும் புகழ்தல் இயல்பே என்க!

'அவரவர்க்குகந்த நற்செயலைத் தெரிந்தெடுத்து மேற்கொண்டு ஒழுகுமாறு' அருளி கூறியபோது, சார்புடைய - வகுப்புணர்வற்ற - படைப்பாக உள்ளதோ எனக் கவன்றேன்! ஆயின், நூலின் உளளே ஆசிரியர் தரும் விளக்கங்கள் என் மயக்கம் தெளிவித்தன. நூலின் புறஞ்செல்லவிடாமல், என் சிந்தனையைப் பற்றித் தொடரும்படி ஆசிரியர் நூலாக்கம் அமைந்திருப்பது கண்டேன்!

அடுத்து 'முன்னுரை'யில் பாவலரேறின் கருத்தை நோக்கினேன். அதில் 'பொருள் உலகம்' (247) என்று கூறியது பற்றி எண்ணியெண்ணி மகிழ்ந்தேன்!

Scanned with CamScanner

ஆனுல், "பொருள் அழியக்கூடியது. எனவே, அழியக்கூடிய பொருளைப் பெற்று, அழியக்கூடாத செயல்களைச் செய்ய வேண்டும்' என்பது திருவள்ளுவர் கருத்து'' என்று பாவலரேறு கூறியது நுட்பமாக எண்ணத் தக்கது!

''செயல்களில் உயர்வு தாழ்வு, பெருமை இழிவு அறியாத-வர்களே, தாழ்வான, இழிவான எளிய செயல்களையே செய்ய முற்படுகின்றனர்.''

திருக்குறள் 'ஒரு வாழ்வியல் நூல், இன நலம் காக்க வந்த புரட்சி நூல்' என்றெல்லாம் ஆசிரியர் கூறியுள்ளமை, நமது 'தேசிய நலன்' நம் மண்ணிலேயே, அதன் மடியிலேயே, நெஞ்சிலேயே அமைந்து கிடப்பதை உணர்த்துவதாகும்!

'மனவியல் நுட்பங்களை' அறிந்த ஆசிரியர், இந்நூலை 'நோபல் பரிசு'க்காக எழுதினரல்லர்; தமிழின விடுதலைக்காக வாழ்வுக்காகவே எழுதினுர் என்பேன்!

நூலின் முன்னுரைக் கருத்துகள், திரைப்படத்தில் ஒன்றிய கற்பனை உள்ளத்தை, உண்மை உலகிற்குக் கொண்டு வரும் 'இடைவெட்டு வெளி'கள் - வெண்திரை - போல உள்ளன!

'மரபைப் போற்றிப் புதுமையை ஏற்கும் பண்பு' என்ற தலைப்புக்கு இயைய ஆசிரியர் விளக்கம் அமைந்துள்ளது. வரலாற்றுடன் முரண்பட்டு முரித்துக் கொள்கின்றவர், சரியான கருத்துகளைக் கண்டறிந்தெழுதுதல் இயலாது. முரண்படுதலும், சிந்தித்தலும், தொடர்பு கண்டு தொடுத்தலும் வேண்டுமன்றோ?

'வினையே ஆடவர்க்குயிரே' (குறுந்: 1:5) என்ற மேற்கோள் விளக்கம் 'இக்காலத்து ஆடவர்கள் மட்டுமின்றிப் பெண்டிரும் செயல்திறன் மிக்கவர்களாக இருத்தலைப் பார்க்கின்றோம். எனவே, மாந்தர் அனைவர்க்கும் செயல் பொதுவாகிறது. செயலே உயிர் வாழ்க்கை' என்றானது. 'அவனவன் செய்தவினை' என்பது ஏதோ பிற்போக்குத் தன்மை போல் பட்டது. ஆயின், அஃது, ''பெருமைக்கும்...... கருமமே கட்டளைக் கல்'' என்ற மெய்ப்பொருளை விளக்குவதை உய்த்துணர முடியும்!

'இன்மை ஒருவற்கு இளிவன்று' - 988
'அறஞ்சாரா நல்குரவு ஈன்ற தாயானும்
பிறன்போல நோக்கப்படும் - 1047

பொருத்திக் காணும் கருத்துரைகள் 'எளியவரை' மேன்மைப்-படுத்தும் தன்மையன!

'பயன்படுத்திக் கொள்வதும் கொள்ளாததும் இளைய தலைமுறையினர்தம் மனவுணர்வுகளின் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்தனவாகும்!' என ஆசிரியர் கூறியுள்ளது, 'கட்டாயப் படுத்தலை எவ்வகையானும் ஏற்காத விடுதலையுரம் சான்ற பண்பெனலாம்.

Scanned with CamScanner

ஆயினும், இளைய தலைமுறையை இந்நூல் பற்றிவிடின் விடாது, கருத்துரமேற்றிப் பண்படுத்தும் என்பதுறுதியாகும்!

அறம் பற்றி "உலகில் எந்தக் காலத்தும் எந்தவிடத்தும், எந்த மக்களிடத்தும் தாழாத கொள்கைகளையே அறம் என்று தமிழ்நெறி நூல்கள் சாற்றுகின்றன" (பக்: 3) என்று கூறும் நுட்பம், ஆசிரியர்க்குள்ள மரபின்மீதுள்ள மதிப்பு நலத்தைக் காட்டும்!

ஆசிரியர், 'எண்ணமும் விழைவும்' பகுதியில், எண்ணுதிறன் என்றால் என்னவென்று கூறுகிறார். அது :

"மனம் பற்றிக் கொள்ளுகின்ற ஒரு பொருளைப் (Subject) பற்றி, அறிவுணர்வால், அதனுடை விரிவான தன்மைகளையும் குணநலன்களையும், நன்மை தீமைகளையும் ஆராய்ந்து பார்க்கின்ற தன்மையே எண்ணுதிறன் ஆகும்." (பக்: 7)

ஆசிரியரின் சொல்லுந்திறனைச் செப்பம் - உடல்; நுட்பம் - உறுப்பு; ஒட்பம் - உயிர் (பக்: 11) என்று விளக்குதலால் மேலும் அறியலாம்! சொல் மயக்கம் உடையாரைத் தெளிவுபடுத்தும் நடையழகர் நம் ஆசிரியர்!

'விருப்பம் என்பது உயிருக்கு ஏற்கனவே தொடர்பாய ஒரு பொருளின்மேல் தானகச் செல்லும் மனநாட்டம்' (பக்: 13)

"தொழில் திறன் பெற்றவர்க்கு எவ்வகையான வினைத் தடையும் நேர்வதில்லை" (பக்: 14)

"அறிந்து செய்தல் ஒரு வினைக்குச் சிறந்த திறனாகும்" (பக்:14)

"தெளிவு நூலறிவாலும், செயல்முறையாலும் பெற வேண்டுவதாகும்" (பக்: 15)

இப்படி நூற்பா போலத் தெளிந்த உரைநடைக் கருத்துகள் மனங்கொள்ளத் தக்கனவாகும்!

இயன்றது அறிதல் பற்றிக் கூறும்போது, 'அகலக்கால் வைப்பதினும் ஆழக்கால் வைப்பது நல்லது' (பக்: 16) என்கிறார். ஆக, ஒவ்வொருவரும் 'இது நமக்குச் சொல்லப் பெற்றது' என்று கருதுமாறு பதிய வைக்கும் ஆற்றலை எழுத்தில் காணலாம்!

வினையால் வரும் பயன் தேர்தல் பகுதியில் உள்ள உரைகள் - 'பொதுவுடைமை'க்கு மேலாகும் 'குறளறம்' என்ற கருத்து: சிந்திக்கப்பாலது! 'ஒரு தேசிய இன நலம் போற்றுபவன் இப்படித்தான் சிந்திக்க முடியும் போலும்' என்று நினைத்தேன். ஆனால், மார்க்சியம் ஒன்றும் அறம் திருப்பிய கருத்தையுடையதன்று! 'புனிதம்' என்னும் போலிமையைச் சுட்டெரிக்கும் தன்மையது. வள்ளுவமும் அப்படியே! இங்கே முரணில்லை. ஒரு தெளிவு கிடைக்கின்றது! மேலும், "அறிவியலாளன், குமுக அறிஞன் - எடுத்துக்கொள்ளும் அளவுகோல்கள் அறவியலின் அளவுகோல்கள் அல்ல" என்றதும், "விருப்பு, வெறுப்பின்றி ஆய்வது அறிவிய-

Scanned with CamScanner

வின் (விஞ்ஞானத்தின்) தன்மை' என்றதும், ''இரசுல், விஞ்ஞானம் அடிப்படையில் (a moral) அதாவது அஃது அறமோ, அதன் மறுப்போ கொண்டதல்ல என்றார்'' (கம்யூனிசம், விடுதலையின் இலக்கணம் நூல் -பக்: 171) என்றதும் எண்ணி ஆராய்ந்து கொள்ளத்தக்கனவாம்!

பொதுவுடைமை, பொதுமை என்ற கருத்தாக்கம் எண்ணத்தக்கதாகும்.

''பொதுமையுணர்வுதான் அறவுணர்வாகும்'' (பக்: 20)

அறம் - அறு - பகிர்வு - ஒப்புரவு என்ற ஆய்வும் கருத்தும் தமிழியலுக்குப் பொருந்திய பொதுமைக்கு ஊட்டமளிப்பதாகும்!

''விலங்குகளைக் கட்டியாளுவது போல் மக்கள் கட்டியாளப்பெறுதல் சிறப்பன்று'' என்கிறார். 'அவர்கள் தாமே இயங்குதலே சிறப்பு' என்றும் விளக்கியுள்ளார். பொதுமைக் காலத்தில் அரசு உலர்ந்து உதிர்ந்து போயிருக்கும் என்ற நெறியும் இங்கே எண்ணற்குரியதாகும்!

''நமக்கும் ஒரு தொகுப்பான உண்மை இப்பொழுது தெரிய வருகிறது. அஃது, உலகில் நாம் எந்தச் செயலையும் செய்வதற்கான செயல்திறம், பொருள் வலி, ஆள் வலி இவற்றைப் பெற்றிருந்தாலும், நாம் நமக்குரிய அல்லது ஏற்ற செயல்களிலேயே ஈடுபாடு காட்டி, அவற்றையே செய்வதற்கு முயலுதல் வேண்டும் என்பது'' (பக்: 26)

நம் தகுதிக்குத் தாழ்வான செயல்களைத் தவிர்த்தல் வேண்டும் என்பதனை இவ்வாறு தெளிவுபடுத்தித் தமிழரின் தன்முனைப்புக்கு அறைகூவல் விட்டுள்ளார் எனலாம்!

வினைவலிமை அறிதல் ஆகிய பகுதிகளை ஆராயும்போது ஆசிரியர், வள்ளுவத்தின்மேல் நிகழ்கால முரண்களைச் செலுத்தி உராய்கிறார். இதனால், வள்ளுவத்தின் மாற்று மேலும் மேலும் ஒளி பெருகி நிற்கிறதைக் காணலாம்!

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் காண'க் கூறும் வள்ளுவம், 'கல்லாதான் ஒட்பம்... என்ற குறள் மூலம் (குறள் 404) முரண்படுகிறதே என்று மயங்கியபோது, உலகியல் பற்றிய வள்ளுவனின் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்ளும்படி செய்துவிடுகிறார் பாவலரேறு! ஆம், நாம் வள்ளுவனின் நுண்ணிய உலகில் உலவி வந்த பட்டறிவைப் பெற இந்நூல் பல வகையில் உதவுகிறது!

'தெரியாததில் ஈடுபடவே கூடாது' (பக்: 35) 'ஒட்பம்' இயல்பான அறிவுநிலை என்று குறிப்பிடுகிறார் எனக் கருதுகிறேன் (பக்: 85). ''கசடற வல்லதூஉம் ஐயம் தரும்'' (குறள் 845) என்ற கருத்து முத்துகள் ஆசிரியரின் ஆழ்ந்த புலமைக்கு

அடிப்படைகளாக நின்று நம்மையும் வள்ளுவத்தின்பால் ஆற்றுப் படுத்துகின்றன.

'எதிர்ப்பு நிலை, வலிமை யறிதல்' பற்றிக் கூறும் கருத்து ''ஒவ்வொரு வினைக்கும் ஓர் எதிர்வினை உண்டு'' என்பது, முரண்பாடு பற்றிய மெய்ம்மம் தமிழர்க்குப் புதியதன்று என்று நிறுவுகின்றது.

''எதிர்ப்புகளுக்கு ஈடு கொடுக்கும் முயற்சிகளில் அவன் அறிவைப் இயற்கை பரவலாக்குகிறது; ஆழமுடையதாக்குகிறது''
(பக்: 37)

இதனை நோக்க, மாஓவின் 'மேற்கோள்களைப்' பொதுவுடைமையாளர் கையேடாகக் கருதினர். இதனை எந்தச் சூழலில் எடுத்துக்காட்டுவது, காட்டியது என்று காணுமலே அங்கங்கே எதிர்ப்பினைக் காட்டி, வள்ளுவத்திற்கு 'உறை' போட்டவர்கள் உண்டு என்று தெரிகிறேன். மாஓவையும் புரியாமல், வள்ளுவத்தையும் அறியாமல் மயங்கியமையாலேயே, 'எதிர்ப்பு நிலை' ஒன்றினை மட்டுமே கொண்டு வள்ளுவத்தைப் புறக்கணித்தவர் உண்டு. இதனுல், இவர்கள் 'தேசிய உணர்வையும்' இழந்து மயங்கித் தனிமைப்பட்டுப் போனுர்கள் எனலாம்!

ஆயின், பாவலரேறு இத்தகு நெறிவிலக்காக மட்டுமின்றி, வள்ளுவக் கருத்தின் படிநிலைகளை நமக்கு இந்நூல் மூலம் வரிசை நோக்கி வழங்கியிருப்பதைக் காணலாம். ஆம், 'இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான், துன்பம் உறுதல் இலன்' (623) என மரபு சார்ந்த சிந்தனை உரத்தை நமக்கு ஊட்டுகின்ருர்!

ஆசிரியர், ''அறிதோறும் அறியாமை'' பற்றிக் கோடிட்டுக் காட்டியுள்ள பான்மை, நூலை இன்னுர்க்கெனப் படைப்பதில் உள்ள திறம் காட்டுவதாகும்!

அறிவை மூவகைப்பட்டது, தொழிலறிவு, தொழில் செய்யறிவு, தொழில் திருத்த அறிவு -என்கிருர். தத்துவம் (மெய்ம்மம்), நடைமுறை பற்றிக் கூறுவர். பாவலரேறு வள்ளுவ வழியில் புதிய உத்தியை வழங்கியுள்ளார். காட்டாக, இதனை ''வெல்லம் காய்ச்சும் வேலையில் ஈடுபட வேண்டும் என்று முனைபவன், வெல்லந் தின்னுவதை மனத்தில் நினைத்துக் கொண்டு செல்லக் கூடாது. அதைக் காய்ச்சி எடுக்கத் தெரியும் திறனை வைத்துத் தான் செல்லுதல் வேண்டும்'' (பக்: 45, 46) என்பதால் அறியலாம்!

இன்று, அரசியல் ஈடுபாடு பணம் திரட்ட என்றே ஆகிவிட்டதுபோலக் (குமுகாய மாற்றத்திற்கென யார் ஈடுபடுகிருர்?) கூறும் சான்று நினைந்து இன்றுள்ள நிலைமையை ஒப்பிட்டுத் தெரியலாம்!

நட்பின் சிறப்புப் பற்றி: உண்மையான நட்பு என்பது உயிரொடு கலந்த அன்புணர்வால் தோன்றுவது. அது பல

பிறவித் தொடர்புடையது'' — இங்கே 'பல பிறவிக் கருத்து' ஏற்புடையதாக இல்லை. ஆனால், அடுத்துரைக்கும் கருத்து சீரியது. அது ''மக்கள் அனைவர்க்குமே நட்புணர்வு பொதுவானது'' என்பதாம்! நண்பனை, துணைவிக்கு ஒப்பாகக் கூறுகிறார். (பக்: 51,52)

அவள் தன் வாழ்வில் பாதி உரிமை பெற்றவள், அடிமையல்லள் என்றும் விளக்கியுள்ளார்!

பொருள் தேடல் பற்றிச் சொல்லும்போது, ''அயலான் கையிலுள்ள பொருளை நம்பி வினையில் ஈடுபடுவது - அக்கரையில் உள்ள படகை நம்பி ஆற்றில் இறங்குவதைப் போன்றது'' (பக் 56) என்று கூறும் அழகிய எடுத்துக்காட்டு நெஞ்சில் நின்று சிந்திக்கத் தூண்டுவதாகும்! அடுத்து, 'சிறிய அளவினதாக இருப்பினும் தன் ஆளுகைக்கு உரிய உடைமையாக இருக்க வேண்டும்' என்ற நுட்பமும் புலப்படுகின்றது' என்பார். இதனைக், 'குன்றேறி யானைப்போர் கண்டற்றால்' (குறள்: 758) 'தன் கையில் ஓரளவேனும் உண்டு ஆகச் செய்வான் வினை' (பக்: 57) எனுஞ் சான்றுகளாலும் நிறுவுகின்றார்!

'விளைப்பில் (உற்பத்தியில்) ஈடுபடாதவன் எதிரியை இனம் காணல் இயலாது' என்ற மார்க்சிய உண்மையை இவற்றோடு ஒப்புநோக்கி மகிழலாம்!

''பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துட் சென்று'' (குறள்: 753)

இக்குறள் கருத்தைப் பிழைபடப் புரிந்து கொண்டு, 'புரட்சி' பேசுவதாக எண்ணி, 'திருவள்ளுவர் தேசங்களைப் பிடிக்கும் ஆசையுடையவன் அல்லது அதற்கு ஆதரவானவன்' என்று கூறுபவர் உண்டு. மரபறியா மடமைக்கு அடி கொடுக்கும் உரை விளக்கம் ஆசிரியர் நடையில் காண்க: ''எண்ணிய தேயத்துச் சென்று என்பதால், விரைவும், அதன் ஆளுமைக்குத் தொலைவு ஒரு தடையில்லை என்பதும் விளங்கும்'' (பக்: 59) ''பொருள் மதிப்புடைய அனைத்து உடைமைகளும் பொருளே. இருப்பினும் பொருள் என்னுஞ் சொல் பேரளவில் பணத்தைத்தான் குறிக்கும்.'' (பக்: 58)

12 கருவி தேடல். ''கையே ஒரு செயலுக்கு முதல் கருவியாக இருக்கிறது,'' கை - செயல்; கைஇ - செய்து. கைசெய்தல்-வினை செய்தல். கையறுதல் - செயலறுதல். கைதூவல் - வினையை தவிர்த்தல்; செயலை நீக்குதல். கை - ஒழுங்கு (குறள்832) கைத்திறன் அல்லது செயல்திறன். (குறள்: 935)

'பொருள் கருவி காலம் வினை இடனொடைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்' (குறள் 675)

கருவி - தொழில் கருவி.

இவ்வறிவார்ந்த, மொழித் திறமிக்க, ஆய்வுரை, ''கை, மாந்தனின் படிநிலை முதல் வளர்ச்சிக் கட்டம்'' என்ற எங்கல்சை

Scanned with CamScanner

நினைவுபடுத்தும்; கை, குரங்கிலிருந்து மாந்தனைப் பிரித்தது; உயர்த்தியது என்ற உண்மையைப் புலப்படுத்தும்!

'சுவரில் ஆணி அடிப்பது' பற்றிய உத்தி 12க்கு மேல் கூறியுள்ளார். கருவியைப் பயன்படுத்தல் குறித்த கவனம் விளக்கும் முறை - எளிமை - வண்ணிப்பு - வியந்து போற்றுதற்குரியது! 'அவரவர்க்கு ஏற்ற செயல்' -இந்த விளக்கம் ஒரு வாழ்வியல், புரட்சி சார்ந்தது!

''ஒரு யானை செய்யும் வேலையைச் செய்ய முடிந்தவன் ஒரு மாடு செய்யும் வேலையைச் செய்வது எளிதுதான். ஆனால் இஃது இகழ்ச்சியானது''

இங்கே 'கட்டளைக் கல்' மீண்டும் தேவை கருதி வலியுறுத்தப் படுகிறது.

'அறிவுக்கருவி' (பக்: 69) யாகப் பாவலரேறின் நூல் இலங்குகிறது. இதனை, நோக்கிட நூலின் பகுதிகளை, பாட நூலாக மாணவர்க்கு வைத்தல் உரிய செயலாகும்!

மேலும், நம் நோக்கில் நூலைச் செப்பமாக எழுத விரும்பிய ஆசிரியர் புறனடையாக எதனையும் விரித்துச் செல்லக்கூடியவரல்லர். இதனை அவர் ''பொறியின்மை யார்க்கும் பழியன்று' பொறி - விதி (ஊழ்) பரிமேலழகர் கூற்றை மறுக்காமல் தெளிவுற்ற நிலையில் கூறவேண்டிய கருத்தினைக் கூறுவதால் அறியலாம்.

''நம் அறிவுக்கு அப்பாற்பட்ட உணர்வியல் பொருளாக இருக்கலாம். அதனை நாம் ஆராய்ந்து கொண்டோ, எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டோ இருக்கத் தேவையில்லை'' என்று கூறுவதன் மூலம், பாவலரேறின் அறிவு நாட்டமும், அறிஞர் மேற்கொண்ட மதிப்பும் புலப்படும்!

மேலும், ''உலகில் வாழ்கின்றவர்க்குச் சொன்ன அறிவுரைகளே திருக்குறளாதலின் உலகியற் பொருளையே நாம் கொள்ளுதல் வேண்டும்'' என்றவுரை, பாவலரேறின் அணுகுமுறைக்குச் சான்றாகும்!

சில நூல்களை மேலோட்டமாகப் படிக்கின்றபோது, உடன்பாடு மிகுதல்போல் தோன்றி, ஆழமாக எண்ணிப் பார்க்கும்போது எதிர்மறை அதிகமாகும். ஆனால், பாவலரேறு நூலைப் படிக்கப் படிக்க அதில் மனம் படிகிறது; சிந்திக்கச் சிந்திக்க நெருக்கம் பெருகுகிறது.

மேலும், 'தன் அழகு கெடுமென்று பிள்ளைக்குப் பால் கொடாமல் இருப்பது' தன்னலம். 'அவர்களுக்குத் தாய்மை உணர்வும் குறைவாகவே இருக்கும். அவர்களைத் தாய்கள் என்று சொல்வதைவிடப் பேய்கள் என்று சொல்லலாம். மற்றபடி நாய்கள் என்றுகூடச் சொல்லக்கூடாது. ஏனெனில், நாய்கள்தாம்

தம் குட்டிகளுக்கு அன்போடு பால் கொடுக்கின்றனவே?' (பக்.79) என்று நகை நயமிக்க நடையால் ஆங்காங்கே மனத்தைக் கட்டிப் போட்டுவிடுகின்றார்!

''இயற்கைக் கூறுகள்; அன்பு, பண்பு, அவா, குணம், அறிவு நாட்டம்.'

செயற்கைக் கூறுகள்: அறிவீடுபாடு, பழக்கவழக்கம், மொழியுணர்வு, இனவுணர்வு, நாட்டுணர்வு, உணவு, உடை, நாகரிகம்.'' (பக்: 92)

''அன்பைவிட ஒரு வினை முயற்சிக்கு, அறிவு தேவையானது.'' (பக்: 92)

'செயல்முறை' (குறள் 635) பற்றிய விளக்கம் முதலியன, ஆசிரியரின் பாரிய பட்டறிவு ஒளிப்பக்கங்களாக உள்ளன என்பேன். மக்கள் பண்பு பற்றிய விளக்கம் காணின் இஃது எளிதில் புலப்படும்!

''அடுத்து, முயன்றாலும் ஆகுநாள் அன்றி, எடுத்த கருமங்கள் ஆகா'' என்பது வாக்குண்டாம் செய்யுளடி. எச்செயலும் பருவத்தால் அன்றிப் பழா என்பது அது கூறும் முடிவு.'' (பக்: 95)

சோர்வும், அவநம்பிக்கையும் கொண்டு மரபுரிமையையும் பண்பு நலன்களையும் பார்த்து வந்த 'உலகியல்' கண்ணோட்டத்தில் தப்பிய தேசிய நலன்களைப் புரிந்துகொள்ள நறுக்குத் தெறித்தாற்போலப் பாவலரேறு சுட்டியுள்ள உண்மைகள் உதவும் எனலாம்!

''அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின் (குறள் 483)

என்று திருவள்ளுவர், நெப்போலியனின் வீரக்குரலோடும், கிரேக்கப் பேரறிஞன் ஆர்க்கிமிடீசின் அறிவுக்குரலோடும் ஒன்றி முழங்குவார்'' (பக்: 96) என்ற கருத்து, அவர்க்குள்ள குறள்மேல் ஆழ்ந்த ஈடுபாடு, வரலாற்றின் பார்வை, கற்பனை வளம், விரிந்த மனவெழுச்சியைக் காட்டும் என்லாம்.

மேலும், 'நெடும்புனல்' விளக்கம் (பக்: 104) அவர்தம், அறிவியல் நோக்கு, ஆராயும் பண்பை நாமும் பெறத் தூண்டுவதாக உள்ளது.

ஊழ் வேறு, விதி வேறு - விரிவு இந்நூலின் தொடர்ச்சியாகப் பல்வேறு துறை நூல்களையும் பாவலரேறு தருதல் வேண்டும் என்ற ஆர்வமேலீட்டை நமக்குத் தருகிறது.

''முதல் உறுதிக்கு ஊக்கம், இரண்டாவது உறுதிக்கு 'ஒருவந்தம்' எனும் சொல்லையும் அமைத்துள்ளார்'' (குறள் 593) எனத் தரும் விளக்கம் (பக்: 115), நாம் நம்மையே உள்நோக்கி உணர்ந்து மாற்றியமைத்துக் கொள்ளத் தூண்டும் சுடர் ஆகும்!

Scanned with CamScanner

16. தாழாது உழைத்தல் பற்றிச் சொல்லும்போது, "முதலில் மாந்தன் உழவையே முதல் தொழிலாகச் செய்தான் என்பதையும், அதைச் செய்தவன் தமிழனே என்பதையும் வரலாற்றடிப்படையில் உணர்த்தும்'' (பக்: 129) என்கிறார். இங்கே 'தேசிய இன நூல் திருக்குறள்' என்ற கருத்தை ஆசிரியர் வலிவு செய்கிறார்.

17. முன்னெச்சரிக்கையும் கண்காணிப்பும் பகுதியில் அறிவு மூன்று என்பார். அவை: வரலாறு, வாழ்க்கை, அறிவியல் எனத் திருவள்ளுவர் வழிநின்று மூன்றாகப் பகுத்துக் கூறியுள்ளார்.

மார்க்சியம், இயங்கியல், பொருள்முதலை வரலாற்றினூடே தொகுக்கப் பெற்ற குமுக அறிவியல். இங்கே மார்க்சியமும் வள்ளுவமும் ஒத்துப்போவதை உணரலாம். திரு. வி.க. அவ்வாறு ஒப்பியலால் இவர்க்கு முன்னே மார்க்சையும் வள்ளுவரையும் இனங்காட்டியுள்ளார் எனக் கருதுகிறேன்.

''எதிரதாக் காக்கும் அறிவு'' வள்ளுவம். அவ்வாறே மார்க்சியம் எனலாம்! ஆகவே, மார்க்சியத்தை நாம் எங்கும் தேடல் வேண்டாம். அதனை இந்த மண்ணின் மரபு சார்ந்த வாழ்க்கையில் - புழுதிபடிந்த பொன்மணியாய் விளங்குதலைக் கண்டறியலாம்!

அடுத்து 'இதற்குப்பின் இது' என்னும் எச்சரிக்கையின் ஆறு உத்திகள் உளம் கொள்ளத்தக்கனவாம். அவை: 1. இதற்குப்பின் இது 2. இதனால் இது 3. இதற்காக இது 4. இது போனால் இது 5. இது வந்தால் இது 6. இதுவே இது.

இங்கே, ஓர் எண்ணம். சீனாவில் 'மாவோ' என்றால், தமிழகத்தில் பாவலரேறு. இப்படிச் சொல்வதால், மாவோவும் பாவலரேறும் ஒன்றென்று கருதுதல் வேண்டாம். ஏனெனில் சீனம் வேறு; தமிழகம் வேறு. சீனத்தில் மாவோ தோன்றியிருந்தார்; தமிழகத்தில் பாவலரேறு தோன்றியிருக்கிறார். இவர்களின் வாழ்வியல், புரட்சிகரக் கடமைகளை நாம் கற்றறிய வேண்டும் என்பதே!

மார்க்சுக்கு ஓர் இலெனின், ஆனால் வள்ளுவனுக்கு...? என்ற வினாவைக் குன்றக்குடி அடிகளார் கிளப்புவதுண்டு. அந்த வினாவிற்கு விடை: பாவலரேறு, இன்று! நாளை யாரோ...? வரலாறு வளர்ந்து முன்னேறிப் பாய்வதன்றோ?

சமனியங்கள், கணிப்பியல், கணிதவியல் மூலம் 'அஞ்சாமை வேண்டும்' என்பதை (பக்: 163) நுட்பமாக விளக்கியுள்ளார்.

மூவுரம் — மும்முரம்: உடலுரம், உள்ளவுரம், அறிவுரம் என்பார் பாவலரேறு. அதில் உடல்தான் மூலமுதல் (First Capital) என்கிறார். அப்படியே 'உள்ளத்தையும் நாம் இயக்க முடியும்'' (பக். 210) என்று கூறியுள்ளார்.

Scanned with CamScanner

19. இழப்பு கண்டு சோர்வுறுமை

20. துன்பம் கண்டு துவளாமை

21. துன்பம் வரும்பொழுது தவறான வழிகளைக் கடைப்பிடியாமை. தலைப்புகளின் வைப்புமுறை - கருத்து வளர்ச்சி, பயில்முறைக்குச் சான்றளிக்கும் எனலாம்.

பொதுமை உலகம் உருவான பிறகே சிக்கல்கள் தீரும்; நேர்மை விளங்கும் என்று கருதி, இன்றுள்ள அனைத்துத் தீமைகளையும் கொடுமைகளையும் இயல்பானதென்று கருதி ஒய்ந்து போகிறவர்கள் உண்டு. அவர்களிடையே அறம்சார்ந்த குமுக அமைப்பைக் கட்டியெழுப்பும் உள்ளார்ந்த செயல், செயல்திறனை வளர்க்க இந்நூல் தூண்டுகின்றது.

'பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் கூடாது' என்பது வள்ளுவர் கருத்தும் பாவலரேறு கருத்துமாம்!

'மாந்த மனம் இழப்பைப் பொறுத்துக்கொள்வதில்லை' (பக். 250) என்பதனால் இது விளங்கும்!

சிக்கனம் - பொருட் பொறுப்பினால் இயங்குவது.

கஞ்சத்தனம் - பொருளாசையால் விளங்குவது (பக்: 291) என்று கூறும் தெளிவு. வெல்லும் சொல்லின்றிச் சொல்லும் ஆற்றலைப் பாவலரேறு படைப்பில் காணலாம்!

இறுதியாக, பிரமாண்ட என்ற சொல்லுக்குப் 'பெருமாண்ட' என் (பக்: 316) பதே சரி என்று கூறியபடி இந்நூல் பெருமாண்ட நூல் ஆகும்

ஆயின், பணியாளர்கள் பற்றிக் கூறும்போது 'போராட்டக் குணம் அற்றவராக இருத்தல் வேண்டும்' என்பது மார்க்சிய முரணாகவுள்ளது. 'போராட்டம்' வளர்ச்சி. ஆனால், இன்றுள்ள தொழிலாளர் போராட்ட முறை'யே பாவலரேறு இப்படி ஒரு கருத்தாக்கத்திற்கு வரக் காரணமோ என்று வினவத் தோன்றுகிறது!

இங்கே, அப்படியே ஏற்பது குருட்டு நோக்கம், எண்ணிக், கலந்து ஆராய்ந்து பாராமை, உயர்ந்த நிறுவனக் கருத்தென்று அப்படியே விழுங்குவது கூடாது என்ற அடிப்படையில் 'செயலும் செயல் திறனும்' நூலைப் பயிலுமாறு வேண்டுகிறேன்.

நாம் மனவுணர்வில் உயர்ந்தாலும் வாழ்வியலில் தாழ்ந்தே கிடக்கின்றோம் என்பதையும் எண்ணிப் பார்த்தல் நல்லது!

"It is quite wrong to take a formalistic attitude and blindly carry out directive without discussing and examining them in the light of actual conditions simply because they come from a higher organ."

"We need Marxism in our Struggle." - Mao -

Scanned with CamScanner

"We have descended physically but we are still up in the mountains mentally."

மாவோ கூறியபடி நாம் மிகவுயர்ந்த பரம்பரைப் பெருமை, சிந்தனை உடையவராக உள்ளோம். நாம், நம் வாழ்க்கைக்கான மேன்மைக்கான போராட்டத்தில் கையெடுக்க வேண்டிய போர் நூலே 'செயலும் செயல் திறனும்' எனலாம்.

மேலும், "பொதுமை என்பது ஒரு வகையில் குமுகத்தின் அமைப்பு அன்றி வேறன்று" என்ற மார்க்சியர் கருத்தையும் இந்நூலின் செம்பொருளோடு ஒப்புநோக்கித் தெளிக!

"தங்கு தடையில்லாத - விடுபட்ட மாந்த வாழ்வே முழுமையான குறிக்கோள். இந்நிலை தொடர்ந்து இருப்பதற்கான அடிப்படையே பொருளியல் அமைப்பு."

'இதை மாவோ மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டார்.' காரணம், அவருக்கு இருந்த தொன்மையான சீனக் கலாச்சாரத்தின் மரபுதான்! இத்தகைய மரபு அற்றவர்கள் மார்க்சின் நடுவக் கருத்தை எளிதில் புரிந்துகொள்ளல் இயலாது."

"பண்பாடற்ற கருத்துப்பரப்பல் செய்து வருபவர்களுக்கு மார்க்சும் புரியாது; மாவோவும் புரியாது" (பக்: 202)

(கம்யூனிசம் - விடுதலை இலக்கணம்)

இங்கே, இன விடுதலைப் போராளிக்குரிய அறிவு நலன்கள் வாய்க்கப்பெற்ற பாவலரேறு குறித்து நாம் சொன்னவற்றைச் சிந்திப்பாராக. ஏனெனில், "மாந்தர் குல அறிவெனும் உறுதியான அடித்தளத்தை மார்க்சு தமது படைப்புக்கு அடிப்படையாக்கிக் கொண்ட(ா)ர்...." "மாந்தக் குமுகத்தின் வளர்ச்சியை ஆளும் நெறிகளை ஆராய்ந்து அறிந்து முதலாளியமானது பொதுமையை நோக்கி வளர்வது தவிர்க்க முடியாததாகும் என்பதை மார்க்சு உணர்ந்து கொண்டார்" என இலெனின் (மார்க்சு, எங்கல்சு, பொதுமை -பக்: 184-185) கூறிய சான்றின் அடிப்படையில், சான்றுளராக நின்று பாவலரேறும் நூலாக்கியுள்ளார் எனலாம்!

நூலாக்கம் அமைப்பு வைப்பு யாவும் நன்று; கூறியது கூறல்போல் வந்த செய்திகள் (பக்: 45, 130) (பக்: 36, 112) பற்றி ஒரு குறையர்கச் சொல்லி வைக்கலாம். பிழைப்பட்டியல் ஒரு குறைதான். செப்பம் ஒன்றே நோக்கும் செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழுவிற்குக் குறை தெரியாதிருக்க ஞாயமில்லை.

'செயலும் செயல்திறனும்' எனக்கெழுதப்பெற்ற அறிவுறுத்தல் என்றே கருதினேன். அப்படியே பயில்வார் எல்லாம் உணர்வார் என்பதுறுதி.

—o—

Scanned with CamScanner

செந்தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம்.
பொது அறிவிப்பு.

பேரன்புடையீர்! வணக்கம்!

நீண்ட நெடுநாள்களாகக் கருத்தில் இருந்துவந்த "செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கழக" அமைப்புத் தொடர்பாக அண்மையில் கீழே கையொப்பமிட்டுள்ள தென்மொழி ஆர்வலர்களும் அன்பர்களுமாகச் சேர்ந்து, ஒரு முடிவெடுத்து இந்த வேண்டுகோளை விடுக்கிறோம்.

அதன்படி மிக நெருக்கமும், தூய தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் தென்மொழியின்பால் இடையறாத ஈடுபாடும் கொண்ட நூறு அன்பர்களைத் தேர்ந்தெடுத்து ஒருங்கிணைத்து அவர்களை நூல் வெளியீட்டுக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்திருக்கிறோம். அவர்களுடன் தாங்களும் ஒருவராகச் சேர்ந்துகொள்வதற்கான வாய்ப்புண்டு என்பதைப் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக்கொள்கிறோம். இதற்கு எல்லாருடைய முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

நாங்கள் வகுத்துக் கொண்ட திட்டப்படி அவரவர்களுக்கு ஒதுக்கப்படவிருக்கும் பங்குத் தொகை உருபா 500, 1,000, 2,000, 3,000 ஆகும்.

இத்தொகையைவிட அவரவர்கள் பங்குக்கு கூடுதலாகவோ, குறைவாகவோ தங்களால் செலுத்த இயலும் என்ற நிலை இருக்குமானால், அவர்கள் அவ்விருப்பத்தை எங்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன், அவர்கள் இத்திட்டத்தையும் அதில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்களிப்பையும் முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு அடையாளமாக உடனடியாக ஒதுக்கப்பட்டதொகையை முழுமையாகவோ அல்லது 'குறிப்பிட்ட நாளுக்குள் அனுப்புகிறோம்' என்கின்ற உறுதிமொழியையோ எங்களுக்கு உடனடியாக விடுத்து வைக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

இத்தொகையை, தற்காலிகப் பொருளாளராக அமர்த்தப் பட்டிருக்கும் திரு. துரை. தென்னவன் மே/பா. தென்மொழி, சென்னை-5 என்னும் முகவரிக்கு மட்டும் குறித்து எடுக்கப்பெற்ற வரைவோலை (டிராப்ட்) வழியாக மட்டுமே அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இத்திட்டத்தின் வழி திரட்டப்பட்ட தொகையைக் கொண்டு பாவலரேறு அவர்களின் 'செயலும் செயல்திறனும்' என்கின்ற நூல் முதல் வெளியீடாக வந்து, அதன் வெளியீட்டு விழாவும், சென்னையில் 19-3-88இல் நடைபெற்றதை அறிந்திருப்பீர்கள். இத்திட்டத்தின் கீழ் மேலும் பாவலரேறு நூல்களும் பிற தேவை-

Scanned with CamScanner

தொடர் :7

நூற்சுருக்கம்

இன்றுள்ள தமிழர்கள்!

நூல்: தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்.
ஆசிரியர் : பர். க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம்: ஐந்திணைப் பதிப்பகம்,
282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

தமிழர், தமிழ் மொழியைப் பேசும் ஓர் இனத்தினர் என்று ஏனைய நாடுகளைப் போலவே வலுவாக உருவாகி இருத்தல் வேண்டும். அவ்வாறு உருவாகாமல் சாதி வழியாகச் சிதையச் செய்தது ஆரிய வழி வந்த வருணாசிரம அமைப்பே ஆகும். நாம் அனைவரும் தமிழ் பேசுவோர் என்று மொழிவழி ஒன்றுபடுத்த முயன்றால், 'இல்லை, இல்லை, நான் இன்ன சாதி அவன் அந்தச் சாதி' என்று தமிழர் சாதி வழியாக, குழு குழுவாகப் பிரிந்தனர். மொழி எல்லையைத் தாண்டி வேறு மக்களை ஏற்க வைத்த அதே நிலையில், தன் மொழியைச் சார்ந்து இனமானம், மொழிமானம் தோன்றாமல் தடுத்தது இச்சாதியம்தான். பல மொழியினரோடு சேர்ந்து வாழ வேண்டிய அரசியல் கட்டாயம் ஐரோப்பிய ஆட்சியிலும் இன்ன பிற ஆட்சியிலும் நேர்ந்தபோது 'நாமெல்லாம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழரில்லையா' என்று

(முன்பக்கத் தொடர்ச்சி)

யான நூல்களும் தொடர்ந்து வெளிவரவிருக்கின்றன. எனவே, இத்திட்டத்தில் சேர விரும்பும் அன்பர்கள் ஆர்வலர்கள் தங்கள் ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவிப்பதுடன், தாங்கள் செலுத்த விரும்பும் தொகையையும் எங்களுக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுகிறோம்.

இவண்,
அமைப்புக் குழுவினர்.]

திரு. நல்லப்பன், க.மு ; ச.இ.
சென்னை உயர்நெறிமன்ற வழக்குரைஞர். (தலைவர்).
திரு. தென்னவன்கோ,
துணைப்பொதுச்செயலர், உ.த.மு.க.(துணைத்தலைவர்).
திரு. வெற்றிச் செல்வன்,
(செயலர்), வேளச்சேரி, சென்னை.
திரு. துரை-தென்னவன்,
(பொருளர்) அசோக் இலைநந்து, சென்னை.

தாங்கள் தொடர்பு கொள்ளவும் பொருள் விடுக்கவும் வேண்டிய முகவரி :-

துரை. தென்னவன்,
மே/பா. தென்மொழி,
சென்னை - 600 005.

தமிழரிடம் நெருங்கினுல், 'இல்லை, இல்லை அவர்கள் எங்கள் மதத்துக்காரர் என்று ஐரோப்பியரையும், அராபியரையும், வட இந்தியரையும், கிறித்துவம், முகமதியம், சைனம் என்று சொல்ல வைத்தது. எப்படி சாதி உள்நாட்டுக்குள்ளேயே தமிழரைப் பிரித்ததோ அதனைப் போலவே, மதம் உலக நாடுகளிடையே தமிழர் என ஒன்றுபட விடாமல் தடுத்தது; தடுக்கிறது; தடுக்கும். ஆக மொழி சார்ந்த மொழிமானம், இனமானம் ஏற்படாமல் சாதிவழிப் பற்றும் மதவழிப் பற்றும் தடுக்கின்றன. இதனைத் தொடங்கி வைத்தவர்கள் தமிழகம் போந்த ஆரியர்களே! ஆரியர் தமிழர்மேல் நிகழ்த்திய இப்பண்பாட்டுப் படையெடுப்பைப் போன்ற கொடுமையான வேறொன்று தமிழர் வரலாற்றில் இருக்க முடியாது.

தமிழரில் பெண்ணடிமைத்தனம்!

தாய்மைத் தலைமை:

பண்டையத் தமிழகக் குமுகாயம் தாய்வழித் தலைமை முறையை மேற்கொண்டிருந்தது. தாய்வழிக் குமுக அமைப்பில் பெண்ணுக்கே முதன்மை இடம் கொடுக்கப்பட்டிருந்தது. இதன்படி குடும்பச் சொத்து தாயின் மறைவிற்குப் பிறகு மகனுக்கோ அவனுடைய குழந்தைகளுக்கோ உரியன அல்ல. மாறாக மகளுக்கும் அவளுடைய குழந்தைகளுக்குமே தாய்ச் சொத்து உரியதாகும். இந்த அமைப்பே மருமக்கள் தாயம் எனப் பெற்றது. திராவிடமும் தாய்வழி மரபுரிமையே இருந்து வந்தது என்பது அவரிடம் தேய்ந்து நிலவி வரும் பழக்க எச்சங்கள் புலப்படுத்துகின்றன.

தாய்வழிக் குமுகத்தில் தந்தைவழி உறவினர்க்கு முதன்மை இருப்பதில்லை. தாய்வழி உறவினர்க்கும் அதிலும் குறிப்பாகத் தாய்மாமனுக்கு மிகுந்த முதன்மை கொடுக்கப்பட்டிருந்தது. இன்றும் பார்ப்பனர் அல்லாத தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தாய்மாமன் ஏனைய உறவினர்களைவிட மிகுந்த உரிமைஉடையவனுகக் கருதப்பெறுகிறுன்.

மகளுக்கும் மகனுக்கும் சின்ன அகவையில் தொடங்கி திருமண அகவை வரை நடக்கும் காதுகுத்தும் விழா, பூப்பு விழா, திருமணம் ஆகிய அனைத்திலும் தாய்மாமனே முதலிடம் பெறுவார்; பெறுகிறுர். திராவிடப் பழங்குடிகளைப் பற்றிய ஆய்வும் தாய்மாமனுக்குரிய தலைமையை வற்புறுத்துகின்றது. தண்டப்புலையர் என்னும் பழங்குடியினரிடத்தில் ஏதேனும் இறப்பு நேர்ந்தால் இறந்த உறவினரின் தாய்மாமன் பதினுறு நாள்களுக்குத் துயரம் கொண்டாடுவான். முதுவர், மன்னர், ஊராளி ஆகியோரிடமும் தாய்வழி உரிமை, தாய்மாமன் உரிமை போற்றப்படுகின்றன. நீலகிரிப் பகுதியில் வாழும் வயநாடன் செட்டி, கேரளாவில் வாழும் முல்லைக்குறும்பர் ஆகியோரிடத்திலும் தாய்வழிமுறை உள்ளது. நாயர் குடும்பங்களில் தாய்வழித்

தலைமை மிக விரிவாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. நம்பூதிரிப் பிராமணர்களாலேயே மேற்கண்ட தாய்வழிமுறை வீழ்த்தப்பெற்றுத் தந்தைவழி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. (Anthropology in India P. 162) தந்தைவழி முறை கி. பி. 1956-இல் சட்ட முழுமையாக்கப்பட்டது.

தாய்ப்பெயர் முன்னெழுத்தே மக்கள் பெயர் முன்னெழுத்து:

தாய்வழி முறையைப் பின்பற்றும் கேரளம், கன்னடியர், தமிழரிடையே தாய்ப்பெயரைப் பெண்மக்களுக்கு முதற்பெயராக இட்டு, முதலெழுத்தாகச் சுருக்கி வழங்கும் வழக்கம் உள்ளது. தாயின் பெயர் கோமதி என்றால், மகளின் பெயர் கோ. பகவதி என்று இடப்பெறும். இவ்வாறு தாய்வழிப் பெயர்கள் இடம் பெற்றன என்பதைக் கழகக் காலப் புலவர் பெயர்களும் எடுத்துக் காட்டுகின்றன. சான்று: அஞ்சி அத்தை மகள் நாகையார் (அகம்: 352) தமிழ்க் கடவுள் முருகனும் தாய்ப் பெயரைச் சார்த்திக் கொற்றவை சிறுவன் எனக் குறிக்கப் பெறுவதைக் கழக இலக்கிய வழக்கிலிருந்தும், சிலப்பதிகார வழக்கிலிருந்தும் அறியலாம்.

தாய்த் தெய்வ வழிபாடு :

தமிழ்நாட்டின் தாய்த் தெய்வ வழிபாடான அம்மன் வழிபாடே மிகத் தொன்மையானது. இந்த மண்ணின் மக்களான தமிழகச் சிற்றூர் மக்கள் அனைவரும் அம்மன் வழிபாட்டினராக இருப்பது கருதத்தக்கது. மழையை நல்குபவள் மாரியம்மன் என்று போற்றப்பட்டாள், நிலத்தை வளங்கொழிக்கச் செய்பவள் காளியம்மன் எனப் பெற்றாள். நன்மையைத் தந்து தீமையை ஒடுக்கும் தெய்வமாக (சக்தியாக) அவள் வழிபடப்பட்டாள். நோய் நீக்கும் தெய்வமாக மகமாயி என்று கொண்டாடப் பெற்றாள்.

பெரிய வயிற்றையும் (சூலுற்ற வயிறு), பெரிய கொங்கைகளையும் (பாலூறிய முலை) உடையவளாகத் தாய்த் தெய்வம் உருவகிக்கப்பெற்றாள். அந்த உருவமே தாய்த் தெய்வச் சிற்பமாக வடிக்கப்பெற்றது; மொகஞ்சதாரோவிலும் (முகைந்த தரை - மறைந்த நிலம்) ஆதிச்சநல்லூரிலும் வயிறும் கொங்கைகளும் பெரியனவாக அமைந்திருக்கும் தாய்த்தெய்வ உருவங்கள் கிடைத்துள்ளன. (பி. எல். சாமி, 'தமிழிலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு')

தமிழர் வழிபாட்டில் தாய்த்தெய்வ வழிபாடே மிகப் பழமையானது. அவளைக் கொற்றவை என்று பண்டைய இலக்கியங்கள் குறித்தன. இந்தத் தாய்த்தெய்வம் மிகப் பழமையான தெய்வம் என்பதால்தான் பழையோள் என்று பண்டை இலக்கியங்களில் குறிக்கப்பெற்றாள்; மணிமேகலையில் இவள் இருக்குமிடம் 'முதியோள் கோட்டம்' என்று குறிக்கப்பட்டது.

Scanned with CamScanner

தமிழுக்குரிய பெண் தெய்வமான கொற்றவையின் இருப்பிடம் காடு ஆகும். எனவே காடுகிழாள் எனப்பட்டாள். இவள் போர்த்தெய்வமாகக் கருதப்பட்டமையால் பரணி இலக்கியங்கள் கொற்றவையின் இருப்பிடமான காட்டையும் பாடின; அங்கிருந்த தேவியையும் பாடின. இதனைக் கலிங்கத்துப் பரணியிலுள்ள காடு பாடியது, தேவியைப் பாடியது ஆகிய பகுதிகள் வலியுறுத்துகின்றன.

இனி, கழகக் காலத்திலேயே தாய்மைக்குரிய தலைமை சிதையத் தொடங்கிவிட்டதைக் காணுகிறோம். தாய்வழி அமைப்பின் வீழ்வும் தந்தைவழி அமைப்பின் தோற்றமும் ஒருங்கே கூடும் கூடல் கலப்பு முகமாகக் கழகக் காலம் அமைந்தது.

ஆண்வழி அமைப்பு முழுமையாகத் தலைமை பெறாத நிலை கழகக் காலத்தில் நிலவியதால், பெண்கள் ஆணுக்கு நிகரான வாழ்வை அடைந்திருந்தார்கள். கழகக் காலத்தில் சிறப்புற்று விளங்கிய 473 புலவர்களில் 30 பேர் பெண்டிராக அமைந்துள்ளனர். பெண்டிருக்குச் சம உரிமை வழங்கும் காதல் மணம் பொதுவாக நடைமுறையில் இருந்தது. பெண்ணைவிடச் சிறந்தவர் யாரும் இல்லை; சிறந்தது யாதுமில்லை என்ற கருத்து மேலோங்கி இருந்தது. (பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின். - திருக்குறள்) இறைவனை வேண்டி நோன்பிருந்து பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர் என்று ஐங்குறுநூறு (25)க் குறிப்பு, பெண் குழந்தைகள் பிறக்க விரும்புவதை அன்றைய பெற்றோர்கள் விரும்பினர் எனபதைக் காட்டுவதாகும். பெண் குழந்தையைப் பெற்றோர் எவ்வாறு விரும்பினர் என்பதை ஐங்குறுநூற்றில் ஆறுமுறை மீண்டும் மீண்டும் வரும் தொடர் வற்புறுத்துகிறது. 'குன்றக் குறவன் காதல் மடமகள்' (ஐங் - 255, 56, 58, 59, 60) என்பது அத்தொடர்.

இதனையும் பெண் குழந்தையே வேண்டா; ஆண் குழந்தை மட்டும் வேண்டும் என்று கடவுளை வேண்டி வழிபாடு செய்யும் ஆரிய இரிக் வேதக் கருத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க. (தமிழ் நாட்டு வரலாறு - சங்க காலம் - வாழ்வியல் பக்: 187 - சி. இராசலட்சுமி)

பருவம் வந்த பெண்கள் வெளியே சென்று, தினைப்புனம் காத்தனர்; மீன் காவல் புரிந்தனர்; உப்பு விற்றனர்; மோர் விற்றனர், இக்குறிப்புகளைக் கழக இலக்கியங்கள் பரக்கப் பேசுகின்றன. பருவம் வந்த பெண்டிரை இற்செறிக்கும் பழக்கம் அன்றே இருந்தது. எனினும் அது மேல்மட்டக் குடும்பங்களில் மட்டும் இருந்தது போலும்.

கழகக் காலப் பெண்டிர் கணவனுடன் சேர்ந்து மது அருந்துவர். (பட்டினப்: 106). ஆடவ இளைஞரோடு கைகோத்து விளையாடுவர். (மதுரைக்: 419). தம் காதலருடன் மகிழ்ந்து கடலிலும்

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

விடுபடாத வரை — தமிழ் நாட்டு விடுதலை என்பது கனவிலும் கைகூடாத ஒன்றாகும்!

இந் நிலையில், நமது கடமை என்பது நாட்டுப்புறத்து மக்களிடம் இறங்கிச் செல்வது: அவர்களின் அழுக்கு மாசுகளை நீக்கி, நலம் பேணுதல்; அறியாமை போக்கக் கல்விப்பணி புரிதல்; வறுமைக் கோட்டைப் போக்க — பொருளடிப்படையை உயர்த்தும் தன்னிறைவுத்திட்டங்களைச் செயற்படுத்துதல், வேண்டும். இவற்றுக் கிடையில், விடுதலை என்பது என்ன என மக்களுக்கு விடுதலையின் இன்றியமையாமையை விளக்கிக் கம்பத்துக்காரன், அடகு பிடிப்பவன், மற்றும் அரசியல்காரன் பிடிகளிலிருந்து விடுதலைபெற வேண்டிய கட்டாயத்தை விளக்கு வேண்டும்! நாட்டுப் புறத்து, ஏழை உழவர் பெருமக்கள் விடுதலைக் கொடியை உயர்த்தும் போது எந்த வல்லரசும் விழுந்து போகும் என்பது உறுதி! வெல்க தமிழ் நாட்டு விடுதலை!

— வலவன், முல்லையூர்.

௦: 1286: அன்புமிக்க ஐயா வணக்கம். நலம். நலங்காண ஆவல்- தமிழீழ விடுதலைப் பெரும்வீரன், தம்பி பிரபாகரனை இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் கொலை செய்ய இந்தியப் படைக்கு ஆணையிட்டிருப்பதைச் செய்தித் தாள்களில் கண்டு கவலையும் உள்ளக் கலக்கமும் அடைந்திருக்கிறேன். தமிழினத் தலைவர்கள் சூளுரைப்பதும் வீண் பேச்சுப் பேசிக் காலத்தைக் கடத்திக் கொண்டும் இருக்கின்றனர். இந் நாள் வரை அறிவித்துப் போராடிய போராட்டங்களால் இராசீவ் தம் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை — மாறாகத் தமிழினத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். தாங்கள் இதை நன்கு அறிந்தவர். என்னே இப்போராட்டங்கள்! எதுவும் தமிழகத்தையோ, தமிழீழ மக்களையோ குறிப்பாகப் பிரபாகரனையோ காப்பாற்றப் போவதில்லை. பிரபாகரன் காப்பாற்றப்படவில்லை என்றால் தமிழகத்தை அடிமைப்படுத்தி ஆண்டு விடுவர் வடவர்.

இந்திராப் பேராயக் கட்சியிலிருந்து வெளிவந்த எம். பி. சுப்பிரமணியன் பிரபாகரனுடைய உயிர் பறிக்கப்படுமானால் தமிழகம் கொந்தளிக்கும் என்ற ஓர் அறிவிப்பு எப்பயனும் தராது. பிரபாகரன் மறைந்தால் தமிழகம் கொந்தளித்து என்ன பயன்? அந்தக் கொந்தளிப்புப் பிரபாகரனைக் காப்பாற்றப் பயன்பட்டால் அவ்வறிவிப்புச் சிறந்தது. இது போலத் தான் தமிழினத் தலைவர்கள் எனக் கூறப்படும் தலைவர்களின் அறிவிப்புகளும் போராட்டங்களும்!

இந் நாள் வரை போராடி இந்தியை நிறுத்த முடியவில்லை. புதுக்கல்வித் திட்டத்தை நிறுத்த முடியவில்லை. தமிழகம் தொழில் போன்ற எல்லா வகையிலும் வஞ்சிக்கப்படுவதும் நின்றபாடில்லை. எனவே இந்தப் போராட்டங்களைக் கைவிட்டு விட்டு, இனி இராசீவ் தமிழகத்தில் கால்வைக்கக் கூசும்படி செயல்களைத் தீட்ட வேண்டும். தாங்கள் உடன்எழுந்து தமிழினத் தலைவர்களைச் சந்தித்து உடனடியாகப் பிரபாகரன் உயிருக்கு எவ்வகை இழப்பும் ஏற்பட்டு விடாதபடி செயல்படத் தூண்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுகிறேன். தமிழினத் தலைவர்கள் ஒன்றாகக் கூடி விட்டனர் என்று தெரிந்தாலே வடவர் சிந்திப்பர்.

எனவே தமிழகத்தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து ஒரு கருந்தரங்கை ஏற்படுத்தி, மக்களிடத்தில் இராசீவ் செய்யும் கொலைகளை எடுத்துக் கூறவும், இன்னொருபக்கம் வலுவான போராட்டங்களைச் செய்ய இளைஞர்களை அணியஞ் செய்யவும்

ஆவன செய்தாகப் வேண்டும். இல்லையென்றால் தங்களோடு அனைவருமே வருந்த வேண்டிவரும். உலக அரங்கில் தமிழர்கள் கோழைகள் என்றாகிவிடும்.

ஆகவே முதல்கட்டப் போராட்டமாகத் தமிழகத்தில் உள்ள வட நாட்டுக்காரர்களுடைய சிலைகள் உடைப்புப் போராட்டம் தொடங்கப்பட விரைவான செயல் திட்டத்தை அறிவித்துச் செய்து முடிக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

இனி வேண்டுகோள்களும்; எச்சரிக்கைகளும் இராசீவை ஒன்றுஞ் செய்யா. அவர் தம்முடைய இனவாழ்விற்கு எல்லா வகை வாய்ப்புகளையும் ஆக்கிக்கொண்டார்; குடியரசு தலைவர் முதல் தம்முடைய திறனாய்வுக் குழு வரைப் பார்ப்பனை அமர்த்திக் கொண்டார்; இலங்கையில் தூதர் பார்ப்பான். எனவே தமிழர்கள் அழிவது அல்லது அடிமை ஆவது உறுதியாகி விட்டது.

பிரபாகரனைக் கொல்வதற்கு இராசீவிற்கு என்ன வந்தது? பிரபாகரன் இராசீவினுடைய மனைவி அவளுடைய தாயைக் கற்பழித்தாரா என்ன? செயவர்த்தனேவிற்கு இவர் ஏன் துணை நிற்க வேண்டும்? இராசீவ் செய்யும் கொடுஞ் செயல்களை மக்களிடத்தில் விரைவாகப் பரப்ப உடனே பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்துப் பரப்பவும் தமிழக இளைஞர்களை அணியமாக்க விரைவில் செயல்படும்படி வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள —அதியமான், தாழையூற்று.

○: 1287: உயர்திரு: ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். எம். சி. ஆர்: அவர்களின் மறைவையொட்டித் தாங்கள் எழுதியது உண்மை நிலையைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தி இருந்தது. தாங்கள் ஒருவராவது அவ்வாறு எழுதியது குறித்து எங்களைப் போன்றோர் உள்ளம் மகிழ்ந்திருக்கும். மேலும் நன்றி, வணக்கம்; அன்புடன் — ஆ. குருநாதன். சென்னை - 44.

○: 1288: அன்பார்ந்த அய்யா வணக்கம்! தங்களது தூய தமிழ் முயற்சிக்கு என் உள்ளார்ந்த பாராட்டுகள். அண்மை வேளைகளில் ''தமிழ்நிலம்'' இதழை தொடர்ந்து படிக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. மறைந்து விட்ட தமிழை, மீண்டும் மலரச் செய்யும் தங்களது அரும்பணி போற்றத்தக்கது.

எனது தாழ்மையான கருத்து என்னவென்றால், தூய தமிழை நாம் அரியணை ஏற்ற, நமது இன மீட்சி முகாமையானது. முதன்மையானதும் கூட, அதற்காகவும் தாங்கள் ஆற்றும் பணி பாராட்டத்தக்கதுதான். ஆனால், இப்பணி மட்டும் போதுமா என்றால், உறுதியாகப் போதுமானதன்று என்பதே எனது கருத்து.

1967-க்கு முன்னர் மக்கள் வழக்கில் இருந்த அக்ராசனர், பிரசிடெண்ட், சேர்மன், மகாகனம், ஸ்ரீலஸ்ரீ போன்ற பல வேற்று மொழிச் சொற்கள் இன்றைய நாட்களில் வழக்கில் இருந்து மறைந்து தலைவர், மேன்மை தங்கிய பெருந்தலைவர் போன்ற சொற்கள் வழக்கில் வரத் தொடங்கி உள்ளன என்றால் அதற்கு ஆட்சி மாற்றமே காரணியம். (இது போல பல சொற்கள்)

(தொடர்ச்சி 14-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)

Scanned with CamScanner